இலங்கையின்
தேசிய போசாக்கு கொள்கை

போசாக்கு அமைச்சு
"சுவசிரிபாய"
385, வண. பத்தேகம விமலவன்ச தேரோ மாவத்தை
கொழும்பு – 10
இலங்கை

இலங்கையின்
தேசிய போசாக்கு கொள்கை
2021 - 2030

அமைச்சரவை ஒப்புதல்

2022 செப்டம்பர் 5 திகதியிடப்பட்ட 22/1179/610/008 எனும் இலக்கத்தினைக் கொண்ட அமைச்சரவைப் பத்திரம் 2022 செப்டம்பர் 13 அன்று இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டது.

2023 இல் அச்சிடப்பட்டது

ISBN 978-624-5719-74-7

உள்ளடக்கம்

1. அறிமுகம் 1
2. கொள்கைப்பின்னணி 2
3. தேசிய போசாக்கு கொள்கை 2010 இன் திருத்தத்திற்கான காரண காரியத் தொடர்பு 4
4. கொள்கை செயல்முறை 5
5. நோக்கு 5
6. இலக்கு 5
7. வழிகாட்டுதல் கோட்பாடுகள் 5
8. கொள்கைக் குறிக்கோள் 6
9. கொள்கை முன்னுரிமை பகுதிகள் 6
10. முன்னுரிமை பகுதிகளுக்கான முக்கிய மூலோபாய திசைகள் 6
    10.1. கொள்கை முன்னுரிமைப் பகுதி I இற்கான பிரதான முலோபாயத் திசைகள்- அனைத்து குடிமக்களுக்கும் உணவு மற்றும் போசாக்கு பாதுகாப்பு 6
    10.2. கொள்கை முன்னுரிமை பகுதி II இற்கான மூலோபாய திசைகள் - ஒருங்கிணைந்த பல்துறை ஒத்துழைப்பும் கூட்டாண்மையும் 7
    10.3. கொள்கை முன்னுரிமை பகுதி III இற்கான மூலோபாய திசைகள் - பாதுகாப்பான உணவுக்கான உரிமையைப் பாதுகாப்பதற்கும், நெறிமுறையற்ற சந்தைப்படுத்துதலில் இருந்து பாதுகாப்பதற்கும் சட்ட கட்டமைப்பை பலப்படுத்துதல் 8
    10.4. கொள்கை முன்னுரிமை பகுதி IV இற்கான மூலோபாய திசைகள் - வாழ்நாள் முழுவதும் போசாக்கு மேம்பாடு 8
    10.5. கொள்கை முன்னுரிமை பகுதி V இற்கான மூலோபாய திசைகள் - அவசரகால சூழ்நிலைகள் மற்றும் தீவிர வானிலை நிலைமைகளில் போசாக்கு மேம்பாடு 10
    10.6. கொள்கை முன்னுரிமை பகுதி VI இற்கான மூலோபாய திசைகள் - மூலோபாய தகவல் மேலாண்மையும் ஆராய்ச்சியும் 10
11. கொள்கையின் எதிர்பார்க்கப்படும் தாக்கம் 11
12. அமுல்படுத்தல் 12
    12.1 போசாக்குக்கான பல்துறை செயல் திட்டங்களின் ஒருங்கிணைப்பு 13
    12.2. தேசிய போசாக்கு கொள்கையின் கண்காணிப்பும் மதிப்பீடும் **15**
13. நடவடிகைகளுக்கான மூலோபாய கட்டமைப்பு 17

சொற்களஞ்சியம் 64

பின்னிணைப்பு 67

தேசிய போசாக்குக் கொள்கை

1. அறிமுகம்

ஒரு தனிநபரினதும் சமூகத்தினதும் ஆரோக்கியத்திற்கும், வளர்ச்சிக்கும், உற்பத்தித்திறனுக்கும் போசாக்கு மிக முக்கியமாகும். சமூகத்தின் போசாக்கு தொடர்பான முடிவுகள் உணவு[1] மற்றும் போசாக்கு[2] பாதுகாப்பை கணிசமாக சார்ந்துள்ளது, அனைத்து மக்களும், எப்போதும் போசாக்கான உணவுக்கு, பௌதிக-சமூக மற்றும் பொருளாதார அணுகலைக் கொண்டிருக்கும் போதும், உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய அவர்களின் தனிப்பட்ட விருப்பங்களுக்கு ஏற்ப போதுமான அளவு உட்கொள்ளும் போதே ஏற்படும்.

இலங்கையில் முதன்முதலில் தேசிய போசாக்குக் கொள்கை (NNP) 1986 இல் உருவாக்கப்பட்டதுடன், அதன் பின்னர் பல திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. முந்தைய கொள்கைகளின் திருத்தங்கள் தே.போ.கொ 2010 உடன் இணைக்கப்பட்டுள்ளதுடன், இது அனைத்து போசாக்குக் கொள்கைகளின் தொடர்ச்சியும் ஆகும். தே.போ.கொ உடன் இணைந்த பல சுகாதார மற்றும் சுகாதாரம் சாரா போசாக்கு தொடர்பான கொள்கைகள் உள்ளன. நாட்டில் சமூக-பொருளாதார நிலையில் பல ஏற்ற இறக்கங்கள் மற்றும் செயற்படுத்தப்பட்ட திட்டங்கள் இருந்தபோதிலும், ஐந்து வயதிற்க்குட்பட்ட குழந்தைகளிடையே, போசாக்குக் குறைபாடு[3], மெலிதல்[4], குள்ளமாதல்[5] போன்றன கடந்த இரு தசாப்தங்களில் தேக்க நிலையில் உள்ளன. தற்போதைய சான்றுகள் போசாக்கு நிலையை மேம்படுத்த நேரடி[6] மற்றும் மறைமுக[7] இலக்குகளின் போசாக்குத் தலையீடுகளை இலக்குப்படுத்தப்படுவதன் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகின்றன. வாழ்க்கைப் பாதையின் அனைத்து நிலைகளையும் கருத்தில்கொண்டு நேரடி மற்றும் மறைமுக போசாக்குத் தலையீடுகளை வழங்கும் சிறந்த மாதிரியாக வாழ்க்கைச் சுழற்சி அணுகுமுறை அங்கீகரிக்கப்பட்டுள்ளது. போசாக்கினைத் தீர்மானிக்கும் சக்திகளாகவுள்ள பல்வேறு துறைகளினுடாக இந்த அணுகுமுறைகள் அமுல்படுத்தப்படுவதுடன் சுகாதாரத் துறையால் மாத்திரம் ஈடுபடமுடியாது.

குடித்தொகையின் போசாக்கு பாதுகாப்பிற்கு தினசரி பன்முகப்படுத்தப்பட்ட பாதுகாப்பான உணவை போதுமான அளவில் பயன்படுத்துவது அவசியம். வீட்டு மட்டத்தில் சரியான வருமான முகாமைத்துவத்தினையும் ஆரோக்கியமான உணவு பழக்கவழக்கங்களையும் ஏற்படுத்தும் விதத்திலான சமூக நடத்தை மாற்ற தொடர்பாடல் மூலம் இதனை அடைய முடியும். நிலையான நடத்தை மாற்றத்திற்கு ஏதுவான ஒரு சூழலை உருவாக்குவதன் அடிப்படையில், சமூகத்தின் போசாக்கு தேவைகளை நிவர்த்தி செய்ய வலுவான அர்ப்பணிப்புள்ள அரசியல் மற்றும் சமூக தலைமைத்துவம் அவசியம். போசாக்கு தொடர்பான நடத்தை மாற்றத்தில் வெற்றிகரமான முன்முயற்சிகள் என சுகாதார மற்றும் சுகாதாரம் சாரா துறைகளில் பங்குடைமை உருவாக்கம் மற்றும் கூட்டணி அத்துடன் போசாக்கு தலையீடுகளுக்கான தொடர்புகளை மேம்படுத்துவதற்கான கிடைக்கக்கூடிய சமூக அடிப்படையிலான தளங்களை நிறுவுதல் அல்லது பயன்படுத்துதல் போன்றன நிரூபிக்கப்பட்டுள்ளன. உணவு உற்பத்தியை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளாக மூல உணவு உற்பத்தியாளர்களின் திறன் மேம்பாடு, புதிய தொழினுட்பங்களைப் பயன்படுத்தும் தேவைப்பாடு மற்றும் காலநிலை மாறுபாடு உள்ளிட்ட பல்வேறு அனர்த்த தணிப்பு முகாமைத்துவம் ஆகியன அடையாளம் காணப்பட்டன.

---

5 வயதுக்குட்பட்ட குழந்தைகளிடையே மெலிதலும்[3] குள்ளமாதலும்[3] முறையே 15% மற்றும் 17% ஆகும் (DHS, 2016)
1-7 இற்கான வரையறைகளுக்கு சொற்களஞ்சியத்தைக் பார்க்கவும்.

சத்தான உணவொன்றின் மலிவுத்தன்மையானது குறிப்பாக சமூகத்தில் பின்தள்ளப்பட்டோரும் கூட நிலையான வருமான உருவாக்கம் மூலமாகவோ அன்றி சிலவேளைகளில் சமூக பாதுகாப்பு முறைமைகளின் ஊடாகவோ அன்றி சந்தை விலைகளில் கட்டுப்பாடு மற்றும் கேள்விக்கு ஏற்றவாறு மாறும் உணவு உற்பத்திக்கூடாகவோ அனைத்து வீடுகளும் போதுமான வளமுடன் இருப்பதை உறுதிப்படுத்துகின்றது.

தேசிய போசாக்கு கொள்கை அரசாங்கத்தின் சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தி கொள்கைகளிற்கு ஒத்திசைவதுடன், சுகாதாரம் மற்றும் சுகாதாரம் சாரா துறைகளின் விசேட கொள்கைகளுடனும் அவற்றின் அமுலாக்கத்திற்கும் ஆதரவளிக்கின்றன. ஆரம்ப பராமரிப்பில் கவனம் செலுத்துவதன் மூலம், உலகளாவிய சுகாதார பரவலுக்கான சுகாதார பராமரிப்பு விநியோக தொகுதியின் பரவலை எவ்வாறு அதிகரிக்க முடியும் என்பது குறித்து கொள்கையின் மூலம் பரிசீலிக்க்கபடும்.

தேசிய போசாக்கு கொள்கைக்கு மற்றைய போசாக்கு சார் தேசிய, மாகாண சுகாதாரம் மற்றும் சுகாதாரம் சாரா கொள்கைகள் அதாவது தாய் சேய் நலன் தொற்றா நோய்கள், முதியோர் நலன், விவசாயம், தேசிய குடிநீர் கொள்கை, வர்த்தக மற்றும் வர்த்தக சலுகை கொள்கைகள் போன்றன ஒத்திசைவாகவும், இசைந்தும் காணப்படவேண்டும். இக்கொள்கையின் சுகாதாரம் சார் உபாயங்களின் அமுலாக்கமானது ஆரம்ப சுகாதார பராமரிப்பு திட்டத்துடன் இணைந்து செல்லவேண்டும்.

2. கொள்கைப்பின்னணி

2.1. மனித உரிமைகளுக்காக உலகளாவிய பிரகடனம் (1948) போதிய வாழ்க்கைத் தரத்திற்கான உரிமையின் ஒரு பகுதியாக உணவுக்கான உரிமையை அறிவித்தது, இது போசாக்கு நிலை, வாழ்க்கைத் தரம் மற்றும் நாட்டின் மக்களின் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கு அவசியமானதாகும். இலங்கை ஏனைய தெற்காசிய நாடுகளிடையே சுகாதார செயற்றிறனில் மிக உயர் நிலையை அடைந்துள்ளதுடன் அபிவிருத்தி அடைந்த நாடுகளுடன் கூட ஒப்பிடக்கூடியதாகவுள்ளது. இதனுடன் தொடர்புடைய அனைத்து ஆதாரங்களையும் அடிப்படையாகக் கொண்ட போசாக்கு நடவடிக்கைகளை அமுல்படுத்திய போதிலும் மக்கள் தொகை போசாக்கு குறிகாட்டிகள் வீழ்ச்சியைக் காட்டுகின்றன, இது தரம் மற்றும் முழு அளவிலான மறுபரிசீலனை செய்வதற்கான தேவையைக் எடுத்துக்காட்டுகிறது. கடந்த இரு தசாப்தங்களாக ஐந்து வயதிற்குட்பட்ட சிறார்களிடையே குறை போசாக்கு குறிகாட்டிகளான நிறைகுறைவு, மெலிதல் மற்றும் குள்ளமாதல் போன்றன தொடர்ச்சியாக காணப்படும் அதேவேளை நிறை அதிகரிப்பு மற்றும் அதீத உடல் பருமன் என்பனவும் இலங்கை மக்களிடையே அதிகரித்துச்செல்கின்றது. மேலும், நுண்ணூட்டச்சத்து குறைபாடாகிய, கர்ப்பிணித் தாய்மார்களிடையேயான போசாக்குக் குருதி சோகையும், பாடசாலை சிறார்களிடையேயான விட்டமின் “D” குறைபாடும் பொது சுகாதார பிரச்சினைகளாகும். குறைபோசாக்கு, மிகை போசாக்கு மற்றும் நுண்ணூட்டச்சத்து குறைபாடு என்பன ஒருமித்து மந்தபோசாக்கின் மும்மை சுமைகளாக இந்நிலைமை கூறப்படுகின்றது. மேலும், இந்த நாட்டில் மாவட்டங்கள், பெருந்தோட்டங்கள் மற்றும் நகர்ப்புற ஏழை சமூகங்கள் போன்ற பாதிக்கப்படக்கூடிய மக்கள் குழுக்களிடையே மந்த போசாக்கில் வேறுபாடு காணப்படுகின்றது.

2.2. ஐக்கியநாடுகள் சபையின் அனைத்து உறுப்பு நாடுகளும் நிலையான அபிவிருத்தியின் 2030 நிகழ்ச்சி நிரலுக்காக 2015 இல் 17 நிலையான அபிவிருத்தி இலக்குகளை (எஸ்.டி.ஜி -SDG) ஏற்றுக்கொண்டன. அவற்றில் SDG-2 பூச்சிய பசி என்பது போசாக்கினை நேரடியாகக் குறிக்கிறது. மற்றைய ஒன்பது எஸ்.டி.ஜி.களை அடைதல், அவையாவன தூய்மையான நீர் மற்றும் சுத்தம், மலிவானதும் தூய்மையானதுமான சக்தி ஆற்றல், நிறுவனம், புத்தாக்கம் மற்றும் உட்கட்டமைப்பு, ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்தல், நிலையான நகரங்கள் மற்றும் சமூகங்கள், பொறுப்பான நுகர்வு மற்றும் உற்பத்தி, காலநிலை நடவடிக்கை, நில வாழ்க்கை, இலக்குகளுக்கான கூட்டாண்மை ஆகியன போசாக்கு இலக்குகளை மறைமுகமாக அடைய உதவுகிறது. உலக சுகாதார நிறுவனம் தாய், சேய் மற்றும் சிறுவர் போசாக்கினை* மேம்படுத்தும் முகமாக ஆறு உலக இலக்குகளிற்கு ஒப்புதல் அளித்து 2025 ஆம் ஆண்டை போசாக்கு மீது நடவடிக்கை எடுக்கும் பத்தாண்டுகளாக அறிவித்துள்ளது. அதன் படி இந்த கொள்கையின் செயற்பாட்டிற்கான மூலோபாய கட்டமைப்பில் SDG க்கள் மற்றும் உலகளாவிய இலக்குகளின் தசாப்த நடவடிக்கை ஆகியவை கருதப்பட்டன.

2.3. மந்த போசாக்கு பல நேரடி மற்றும் மறைமுக அடிப்படை காரணங்களைக் கொண்ட பன்முகத் தன்மையைக் கொண்டுள்ளது. முறையற்ற உணவுப் பழக்கவழக்கங்களான புரத மூலங்கள், பழங்கள் மற்றும் மரக்கறிகளின் போதிய நுகர்வின்மை, அதிக மாப்பொருள் மற்றும் அதிக கொழுப்பு நிறைந்த உணவின் நுகர்வு, ஓரிடத்திலேயே உட்கார்ந்த வாழ்க்கை முறைகள் ஆகியவை நாட்டின் இந்த நிலைமைக்கு சில நேரடி பங்களிப்பு காரணிகளாகும். சராசரியாக பத்தில் ஒரு மக்கள் நாட்டில் உணவு பாதுகாப்பு இன்றி உள்ளனர். எனவே, பாதுகாப்பானதும் ஆரோக்கியமானதுமான உணவுகளிற்குரிய மலிவுத்தன்மை கிடைப்பனவு மற்றும் அணுகலை மேம்படுத்துவதன் மூலம் பாதிக்கப்படக்கூடிய மக்கள் மத்தியில் மந்தபோசாக்கினை குறைக்கலாம். ஆண்டு முழுவதும் பாதுகாப்பானதும் ஆரோக்கியமானதுமான உணவு கிடைப்பனவு ஆனது மோசமான விவசாய நடைமுறைகள், உணவு உற்பத்தியில் காலநிலை பாதிப்பிலிருந்து மீண்டுவர முடியாமை, ஒழுங்கமைக்கப்பட்ட உள்ளூர் உணவு பரிமாற்ற வழிமுறைகள் இன்மை மற்றும் ஆரோக்கியமற்ற உணவு இறக்குமதிகள் ஆகியவற்றால் மோசமாக பாதிக்கப்படுகிறது. போசாக்கு நிறைந்த உணவிற்குரிய அணுகலும் பயன்பாடும் ஆனது விநியோகச் சங்கிலி பூராவும் உணவு இழப்பும்[8] உணவு வீணாதலும்[9], ஆரோக்கியமான உணவு விற்பனை நிலையங்களின் பற்றாக்குறை மற்றும் ஆரோக்கியமற்ற உணவை நியாயமற்ற முறையில் விற்பனை செய்தல் ஆகியவற்றால் குறைக்கப்படுகின்றது. இந்த பிரச்சினைகளுக்கு தீர்வுகாண போசாக்கு தொடர்பான பொறுப்புகளைக் கொண்ட அனைத்து பங்குதாரர்களின் ஈடுபாடும் அவசியம்.

2.4. உணவுப் பாதுகாப்பு என்பது உணவுத்தரத்தை பேணுவதுடன், உணவு தயாரிப்பு உட்பட விநியோகச் சங்கிலி முழுவதும் உற்பத்தியிலிருந்து கையாளுதல், சேமிப்பு, போக்குவரத்து மற்றும் இறுதி தயாரிப்பு வரையில் உணவு அபாயகரமான பொருட்களுடன்[10] மாசுபடுவதைத் தடுத்து உணவின் தரத்தை மேம்படுத்தலைக் குறிக்கும். அபாயகரமான பொருட்கள் ஆனது, நுகர்வோரின் ஆரோக்கியத்திற்கு உடனடியாகவோ அன்றி நீண்ட காலத்திற்கோ தீங்கு விளைவிப்பத்தனால் போசாக்கான உணவுக்கு நுகர்வோரிடமிருந்து எதிர்மறையான பதிலுக்கே வழிவகுக்கும். போதுமான ஆய்வக வசதிகள், மனித வளங்கள், உணவுக் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுச் சேவைகளின்மை காரணமாக உணவு பாதுகாப்பு நடவடிக்கைகளை செயற்படுத்துவது திருப்திகரமான மட்டத்தில் இல்லை.

* ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளிடையே 5% இற்கும் குறைவான மெலிதல் வீதம் மற்றும் குள்ளமாதல் வீதத்தை 40% குறைத்தல், 5 வயதிற்குட்பட்ட சிறு பராய அதிக எடை 2012 ஆம் ஆண்டின் 7% என்ற உலகளாவிய அடிப்படையிலிருந்து அதிகரிக்கவில்லை. இனப்பெருக்கத்தில் வயதிலுள்ள பெண்கள் மத்தியில் இரத்தசோகையின் உலகளாவிய பரவலை 2012 ஆம் ஆண்டில் 29%, இருந்து 2025 ஆம் ஆண்டில் 15% வரை 50% த்தால் குறைத்தல். குறைந்த பிறப்பு எடையை 30% இற்கு குறைத்தல் மற்றும் முதல் ஆறு மாதங்களில் உலகளாவிய EBF அளவை 50% இற்கு (உலகளாவிய போசாக்கு இலக்குகள், 2025) பராமரித்தல்.

8 - 10 இற்கான வரையறைகளுக்கு சொற்களஞ்சியத்தைக் பார்க்கவும்.

2.5. மக்கள் தத்தம் போசாக்கு தேவைகளை எவ்வாறு நிவர்த்தி செய்கின்றனர் என்பதனை சமுதாயத்தினதும், சக நபர்களினதும் செல்வாக்கு, பொருளாதார மட்டம், நாளாந்த முன்னுரிமைகள், சேவைகளுக்கான கிடைப்பனவும் அணுகலும், புராதன நம்பிக்கைகள் விழுமியங்கள் உள்ளடங்கலான கலாசார சமூக நியமங்கள் மற்றும் நடைமுறையிலுள்ள விவசாய சந்தை அமைப்புகள் போன்றனவே தீர்மானிக்கின்றன. மேற்கூறிய தேவைகளுக்கு ஏற்ப சமூக நடத்தை மாற்றத்தை ஏற்படுத்த பரிந்துரைத்தல், நடத்தை மாற்ற தொடர்பாடல் உத்திகளை அமுலாக்குதல் மற்றும் சமுதாயத்தை பலப்படுத்தலும், அணிதிரட்டலும் என்பன கருத்தில் கொள்ளப்படவேண்டும். போசாக்கு தொடர்பான அறிவு, நடத்தை மற்றும் பழக்கங்களை மேம்படுத்துவதன் மூலம், நடத்தை மாற்றத்தை ஏற்படுத்த, வெகுஜன மற்றும் சமூக ஊடகங்களுடனான தொடர்பு, ஒருவருக்கொருவர் இடையேயான தொடர்பாடலை ஊக்குவிக்கும் சூழல்களை இயக்குவதற்கான நிலையான பொறிமுறைகள் என்பன முக்கியமானவை. உலகளாவிய பிரச்சினைகளான[11] அதீத உடல் பருமன், குறைபோஷாக்கு, காலநிலை மாற்றம் என்பன மனிதனுக்கு பெரும் அச்சுறுத்தல் விடுவிப்பதுடன் இந்நிலைமையை மாற்ற அவசரகால பதிலளிப்பும், இரட்டை[12] மற்றும் மும்மை கடமை[13] போசாக்கு செயற்பாடுகளும் உதவும்.

2.6. அதிமேதகு ஜனாதிபதியினால் தலைமை தாங்கப்படும் தேசிய போசாக்கு கவுன்சிலின் கீழ் இயக்கப்படும் தேசிய போசாக்கு செயலகம் ஆனது போசாக்கு தொடர்பான கொள்கை முடிவுகளை செயல்படுத்த ஒருங்கிணைக்கிறது. சமூக போசாக்கினை மேம்படுத்துவதற்கான உடனடி தேவைப்பாடுகளாக ஒரு சில விடயங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவையாவன: ஆளுகை மற்றும் நிர்வாக முறைமைகளை பலப்படுத்தல், நிதி வளங்கள், உட்கட்டமைப்பு மற்றும் மனித வளம் உள்ளடங்கலான நிறுவக இயலுமைகளை வலுப்படுத்தல். நிகழ்ச்சி திட்டத்தை திட்டமிடுகையில் ஆராய்ச்சி சான்றுகளையும் கண்காணிப்புத் தரவுகளையும் பயன்படுத்துதல், 1980 ஆம் ஆண்டின் உணவுச் சட்டம் மற்றும் அதன் ஒழுங்குவிதிகளைப் போன்று தாய்ப் பாலூட்டல் கையேட்டையும் பாராளுமன்றத்தில் ஒரு சட்டமாக அமுலாக்கல், உணவு விநியோகித்தல் சங்கிலி பூராகவும் ஆபத்து முகாமைத்துவம், அரசு சாரா துறையின் உயிர்ப்பான பங்களிப்பு என்பனவாகும். போசாக்கு இலக்குகளை அடைவதற்கு, பாதுகாப்பானதும் ஆரோக்கியமானதுமான உணவுப் பொருட்களின் கோள்வி மற்றும் நிரம்பலின் செல்வாக்கு செலுத்தும் வண்ணம் நடைமுறையிலுள்ள அமைப்புக்களான, தேசிய போசாக்கு கண்காணிப்பு மற்றும் மாகாண, மாவட்ட, பிரதேச முறைமைகள் மூலம் பல்துறை சார்ந்த போசாக்கு இடையீடுகளை ஒருங்கிணைத்தலும் அமுலாக்குதலும் பலப்படுத்தப்பட வேண்டும்.

3. தேசிய போசாக்கு கொள்கை 2010 இன் திருத்தத்திற்கான காரண காரியத் தொடர்பு

போசாக்கிற்கென செலவிடப்பட்ட ஒவ்வொரு டொலரும் 16 டொலர்களாக மீள்வருவதுடன் இலங்கை அரசாங்கம் இலங்கையர்களின் போசாக்கு நிலையினை முன்னேற்றுவதனை ஒரு தேசிய முன்னுரிமையாக வலியுறுத்துகின்றது. இலங்கை SDGS க்களை ஏற்றுக்கொண்டுள்ளதுடன், உலகளாவிய கட்டமைப்புக்குள் தேசிய இலக்குகளை அமைத்து போசாக்கு நடைவடிக்கைகளுக்கான தசாப்தமாக அறியப்படும் 2025 ஆம் ஆண்டுக்குள் தாய், சேய் மற்றும் இளஞ்சிறார்களின் போசாக்கினை (MIYCN) மேம்படுத்துகிறது. ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளிடையே ஒப்பீட்டளவில் தேக்க நிலையில் உள்ள போசாக்கு குறிகாட்டிகளையும், உணவு தொடர்பான தொற்றா நோய்களை அதிகரிப்பது போன்ற நாட்டின் தற்போதைய தேவையையும் கருத்தில் கொண்டு, அந்தக் காலத்திற்குள் உலகளாவிய போசாக்கு இலக்குகள் மற்றும் நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைய போசாக்கு கொள்கையை திருத்துவதன் அவசியம் கண்டறியப்பட்டது.

11 - 13 க்கான வரைவிலக்கணங்களுக்கு சொற்களஞ்சியத்தை பார்க்குக.

4. கொள்கை செயல்முறை

சகல பொருத்தமான துறைகளினால் பிரதிநிதித்துவப்படுத்தும் நிபுணர்கள் கொண்ட தொழில்னுட்ப குழுவால் அலசி ஆராயப்பட்டு தேசிய போசாக்கு பிரச்சனைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது. தேசிய போசாக்குக் கொள்கை 2010 ஐ நடைமுறைப்படுத்துவது தொடர்பாக வெளிப்புற ஆலோசகர் மற்றும் சிவில் சமூக அமைப்புகளால் மதிப்பாய்வு செய்யப்பட்டு அதே நேரத்தில் தேசிய போசாக்குக் கொள்கை 2010 இனை செயல்படுத்துவது குறித்து பரிந்துரைகள் வழங்கப்பட்டன. இக் கொள்கைத் திருத்தத்தில் அடையாளம் காணப்பட்ட இந்த இரண்டு மதிப்புரை தொழினுட்பக் குழுக்களின் கருத்துகளும் மத்திய நிலை முகாமையாளர்கள் மற்றும் பொருத்தமான துறைகளின் கொள்கை வல்லுநர்கள் மற்றும் சில சிவில் சமூக அமைப்புக்களை உள்ளடங்கலான பரந்த பங்கேற்பாளர்களினை பிரதிநிதித்துவப் படுத்திய பட்டறையில் முக்கோணப்படுத்தப்பட்டன. நிபுணத்துவ கருத்துகள் உள்ளடக்கப்பட்ட மாதிரி கொள்கை வரைபு தயாரிக்கப்பட்டு, போசாக்கு நடைவடிக்கைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் சகல பொருத்தமான துறைகளின் பங்கேற்புடன் கூடிய நிபுணத்துவப் பட்டறையில் முடிவாக்கப்பட்டதுடன், இன்னொரு நிபுணத்துவ பட்டறையும் கொள்கை அமுலாக்க உடன்படிக்கைக்காக நடாத்தப்பட்டது. பின்னர் தேசிய போசாக்கு கொள்கை 2021-2023 பொது மக்களின் கருத்துகளுக்கு இணங்க இறுதி செய்யப்பட்டது.

5. நோக்கு

அனைத்து இலங்கையர்களுக்கும் உகந்த போசாக்கு

6. இலக்கு

அனைத்து இலங்கையர்களும் போசாக்கு செழுமையை அடைந்து கொண்டும், பராமரித்தும், நிலையான அபிவிருத்திக்கு திறம்பட பங்களிக்க அவர்களுக்கு உதவுகிறது.

7. வழிகாட்டுதல் கோட்பாடுகள்

பின்வரும் வழிகாட்டுதல் கோட்பாடுகளைப் பின்பற்றுவது அனைத்து உத்திகளையும் செயல்படுத்துவதை பிரதிபலிக்கும்.

i. அனைவரையும் உள்ளடக்கியது
ii. பாதுகாப்பான மற்றும் சத்தான உணவை அணுகுவதற்கான உரிமை.
iii. மக்களை மையமாகக் கொண்ட கொள்கை
iv. பாலின சமத்துவம் மற்றும் உணர்திறன்
v. நெறிமுறை மற்றும் சான்றுகள் சார்ந்த நடைமுறைகளை ஏற்றுக்கொள்வது
vi. பல பங்குதாரர்களின் ஈடுபாடு
vii. பொது மற்றும் தனியார் கூட்டு
viii. சமூக ஈடுபாடும் அதிகாரமும்
ix. வளங்களை திறனுடனும் திறமையாகவும் பயன்படுத்துதல்
x. போசாக்கு தலையீடுகளின் நிலையாக அமுல்படுத்தல்

8. கொள்கைக் குறிக்கோள்

2030 இக்குள் அனைத்து வகையான போசாக்குக் குறைபாட்டையும் முடிவுக்குக் கொண்டுவருவதைக் கருத்தில் கொண்டு, சான்றுகளை அடிப்படையாக்கிய விசேடத்துவமும் உணர்திறன் மிக்க போசாக்கு நடவடிக்கைகள் மூலம் அனைத்து இலங்கையர்களினதும் ஆயுட்காலம் முழுவதுமான போசாக்குத் தேவைகளை நிறைவேற்றுவதை உறுதி செய்தல்.

9. கொள்கை முன்னுரிமை பகுதிகள்

I. அனைத்து குடிமக்களுக்கும் உணவு மற்றும் போசாக்கு பாதுகாப்பு
II. ஒருங்கிணைந்த பல்துறை ஒத்துழைப்பு மற்றும் கூட்டாண்மை.
III. பாதுகாப்பான உணவு உரிமையை பாதுகாக்கும் வகையிலானதும், நியாயமற்ற சந்தைப்படுத் தலை தடுக்கும் வகையிலானதுமான சட்ட கட்டமைப்பை வலுப்படுத்தல்.
IV. வாழ்க்கை வட்டம் முழுவதும் போசாக்கு முன்னேற்றம்.
V. அவசர கால சூழ்நிலைகள் மற்றும் தீவிர வானிலை நிலைமைகளில் போசாக்கு ஊக்குவிப்பு
VI. மூலோபாய தகவல் மேலாண்மை மற்றும் ஆராய்ச்சி

10. முன்னுரிமை பகுதிகளுக்கான முக்கிய மூலோபாய திசைகள்

கொள்கை அமுலாக்க செயல்முறைக்கு வழிகாட்ட ஒவ்வொரு கொள்கை முன்னுரிமை பகுதிக்கும் மூலோபாய திசைகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

10.1. கொள்கை முன்னுரிமைப் பகுதி I இற்கான பிரதான முலோபாயத் திசைகள்- அனைத்து குடிமக்களுக்கும் உணவு மற்றும் போசாக்கு பாதுகாப்பு

சமூக போசாக்கினை மேம்படுத்துவதற்கு உணவு மற்றும் போசாக்கு பாதுகாப்பு அவசியமாவதுடன் பசி மற்றும் மந்த போசணை ஆகியன வீட்டு உணவு பாதுகாப்பின்மையின் முக்கிய விளைவுகளாகும். சத்தான உணவின் கிடைக்கும் தன்மை, அணுகல், மலிவு மற்றும் பயன்பாடு ஆகியவை உணவு மற்றும் போசாக்கு பாதுகாப்பின் முக்கய பரிமாணங்கள் ஆகும். மக்களுக்கு அனைத்து பருவங்களிலும் எளிதாக அணுகக்கூடிய உணவு, போதுமான அளவுகளில் கிடைக்கவேண்டும். உணவு பாதுகாப்பின்மைக்கான முக்கிய காரணம் விலைகள் அதிகரிப்பதன் மூலம் அதிகரிக்கிறது. சமூக பொருளாதார மற்றும் வாழ்க்கை காரணிகளின் ஊடாக, துறைகள் (நகர்ப்புற, கிராமப்புற, மலையக) மாகாணங்கள் மற்றும் மாவட்டங்களுக்கு இடையேயான உணவு செலவிடுதலின் வேறுபாடு பல்வேறு உணவுகள் உண்ணப்படுதலை குறிப்பிடுகின்றது. ஆரோக்கியமான உணவின் பயன்பாட்டினை தடுப்பனவையாக தேவையான மக்களிற்கு உணவு கிடைக்காமல் உணவு வீணாதலும் உற்பத்தி இழப்பும், ஆரோக்கியமான உணவு கிடைகாமை, பாதுகாப்பற்ற உணவு மற்றும் நியாயமற்ற சந்தைப்படுத்தல் என்பன காணப்படுகின்றன.

போசாக்கு பற்றாக்குறையால் மிக அதிகம் பாதிக்கப்படக்கூடியவர்களாக நகர்ப்புற, தோட்டப்புற ஏழைகள், கடுமையான நோய்கள் அல்லது நாட்பட்ட நோய்களினால் பாதிக்கப்பட்டவர்கள், குறைந்த பிறப்பு நிறையுடைய குழந்தைகள், ஏழ்மையான கர்ப்பிணி பெண்கள், ஏழ்மையான குடும்பங்களின் குழந்தைகள் என்பனவோர் அங்கீகரிக்கப்பட்டுள்ளனர்.

கொள்கை முன்னுரிமை பகுதி I இற்கான முக்கிய மூலோபாய திசைகள்

10.1.1. போசாக்கு உணர்திறன் மிக்க உணவு மதிப்பு சங்கிலி[14] மூலம் தரமானதும் ஆரோக்கியமானதுமான உணவுக்கான சமமான கிடைப்பனவு அணுகலை மேம்படுத்துதல்.

10.1.2. ஆரோக்கியமான உணவு நடத்தைகளை ஊக்குவிக்க பொருத்தமான நிதி உத்திகளை ஏற்றுக்கொள்ளல்.

10.1.3. உணவுப் பல் வகைப்படுத்துவதினாலும் உணவுக் கழிவுகளை குறைப்பதன் ஊடாக அனைத்து போசாக்குகளை உச்சளவில் நுகர்வதற்கு சமூக வலுவூட்டல் மற்றும் அணிதிரட்டல்.

10.2. கொள்கை முன்னுரிமை பகுதி II இற்கான மூலோபாய திசைகள் - ஒருங்கிணைந்த பல்துறை ஒத்துழைப்பும் கூட்டாண்மையும்.

போசாக்கு இலக்குகளை அடைவதற்குரிய அடித்தளங்களாக, போசாக்கு இடையீடுகளை வழங்க, சுகாதார மற்றும் சுகாதாரம் சாரா முறைமைகளை பலப்படுத்தல், போசாக்கிக்கான அரசியல் அர்ப்பணிப்பு மற்றும் போசாக்கு நிகழ்ச்சித்திட்டத்திக்குரிய நிதியுதவியும் பொறுப்புக்கூறலும் என்பவற்றை கூறலாம். விரும்பத்தக்க விளைவுகளை அடைவதற்கு, தேவையான தொடர்பாடல் அலைவரிசையின் விரிவான கலவையின் மூலம் போசாக்கு மேம்பாட்டை பரிந்துரைப்பதற்கு அரச, அரச சார்பற்ற, அபிவிருத்தி முகவர் மற்றும் தனியார் துறை உள்ளடங்கலான பொருத்தமான பங்குதாரர்களின் அணிதிரட்டல் அவசியமாகும். மந்தபோசாக்கின் சகல வகையின் முடிவுக்கும், போசாக்கு சார் பல்துறை செயல்திட்டம் அதாவது விஷேட போசாக்கு மற்றும் போசாக்கு உணர்திறன் மிக்க செயல்களினால் இசைவாக்கப்படுதல் அவசியமாகும்.

கொள்கை முன்னுரிமை பகுதி II இற்கான முக்கிய மூலோபாய திசைகள்

10.2.1. அவர்களின் கட்டளைப்படி நேரடி மற்றும் மறைமுக தலையீடுகளை வழங்குவதற்காக சுகாதாரம் மற்றும் சுகாதாரம் சாரா அரச அமைப்புகளை வலுப்படுத்துதல்.

10.2.2. போசாக்கு (MsAPN) க்கான பல்துறை செயல்திட்டத்தை திறம்பட செயல்படுத்துவதற்கு, ஒரு உயர் நிலை, ஒத்திசைந்த மற்றும் வலுவான தலைமையிலான மூலோபாய ஒருங்கிணைப்பு பொறிமுறையை கொண்டுள்ள அரசியல் அர்ப்பணிப்பு மீளவும் வலிவுறுத்தப்படுகின்றது.

10.2.3. மத்திய, மாகாண, மாவட்ட, பிரதேச மற்றும் கிராம மட்டங்களில் பல்துறை போசாக்குசார் செயற்பாடுகளிற்குரிய ஒத்துழைப்பு வழங்கும், பொறுப்பு கூறும் பொறிமுறை உள்ளடங்கலாக திறம்பட இயங்கும் ஒருங்கிணைப்பு தொகுதியை உருவாக்குதல்.

14 க்கான வரைவிலக்கணங்களுக்கு சொற்களஞ்சியத்தை பார்க்குக.

10.3. கொள்கை முன்னுரிமை பகுதி III இற்கான மூலோபாய திசைகள் - பாதுகாப்பான உணவுக்கான உரிமையைப் பாதுகாப்பதற்கும், நெறிமுறையற்ற சந்தைப்படுத்துதலில் இருந்து பாதுகாப்பதற்கும் சட்ட கட்டமைப்பை பலப்படுத்துதல்

தலைமை உணவு அதிகாரி (உணவு கட்டுப்பாட்டு நிர்வாக பிரிவு), வர்த்தகம், நுகர்வோர் விவகார அதிகாரி, காவல்துறை மற்றும் உள்ளூர் அரசாங்க அதிகாரிகள் போன்ற கட்டுப்பாட்டு அதிகாரிகளுடன் போதுமான சுகாதாரத்துடன் கூடிய சூழலில் உணவு பாதுகாப்பின் அனைத்து தொடர்புடைய துறைகளாலும் உணவுப் பாதுகாப்பு ஆதரிக்கப்படுகிறது.

தாவர அடிப்படையிலான உற்பத்திப்பொருட்களில் உள்ள பூச்சிக்கொல்லிகள் மற்றும் பீடைகொல்லிகள், நுண்ணுயிர் எதிர்ப்பான்கள் மற்றும் மீன்வள மற்றும் கால்நடை வளர்ப்பில் உள்ள பிற இரசாயன எச்சங்கள், மரபணு மாற்றப்பட்ட உணவு ஆகியவை சத்தான உணவை உட்கொள்வதில் நம்பிக்கையை இழக்க செய்யக்கூடிய சில எடுத்துக்காட்டுகள் ஆகும். ஒழுங்குமுறை வழிமுறைகளை முறையாக அமுல்படுத்துதல் மற்றும் கண்காணிப்பு முறையை நிறுவுதல் ஆகியவற்றுடன் உணவு மற்றும் நீர் தர பகுப்பாய்வின் இரசாயனவியல் எச்சங்கள் மற்றும் மரபணு பகுப்பாய்வுக்கான வசதிகள் நாட்டில் நுகரப்படும் உணவு மற்றும் நீரின் பாதுகாப்பை உறுதி செய்யவேண்டும்.

கொள்கை முன்னுரிமை பகுதி III இற்கான முக்கிய மூலோபாய திசைகள்

10.3.1. உணவு வழங்கல் சங்கிலி முழுவதும் உணவு சட்ட முறைமைகளை நெறிப்படுத்துதல்.
10.3.2. ஒரு வலுவான சட்டவாக்க பொறிமுறையின் மூலம் நெறிமுறையற்ற சந்தைப்படுத்தலை கட்டுப்படுத்துதல்.
10.3.3. உணவின் தரம் மற்றும் பாதுகாப்பிற்கான கண்காணிப்பு பொறிமுறையை பலப்படுத்துதல்
10.3.4. நீரின் தரம், பாதுகாப்பு மற்றும் சுகாதார விதிமுறைகள், தரநிலைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் அமுல்படுத்துவதை மேம்படுத்துதல்.
10.3.5. உணவுப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும், உணவு தரத்தை பராமரிப்பதற்கும் அனைத்து பங்குதாரர்களுக்கும் அதிகாரம் அளித்தல்.

10.4. கொள்கை முன்னுரிமை பகுதி IV இற்கான மூலோபாய திசைகள் - வாழ்நாள் முழுவதும் போசாக்கு மேம்பாடு

பெண்களின் கர்ப்பகாலத்திற்கு முன்னரான மந்தபோசாக்கு மட்டம், எதிர்கால சந்ததியினரின் வாழ்க்கை வட்டம் முழுவதும் ஒரு தீங்கான சுழற்சியாக தொடர்கிறது. இனப்பெருக்க வயதில் உள்ளவர்களின் போசாக்கு ஆனது, கருவின் வளர்ச்சி, பிறப்பு எடை மற்றும் அவர்களுக்கு பிறந்த குழந்தைகளின் போசாக்கு மட்டத்தை பாதிக்கிறது என்பது தெளிவாகிறது. பெரும்பாலான சந்தர்ப்பங்களில், குறைந்த பிறப்பு எடையுடன் பிறந்த குழந்தைகள் தங்கள் குழந்தைப் பருவம், கட்டிளமைப்பருவம், வயதுவந்தோர் மற்றும் முதியோர் முதலான பருவங்களை, பலவீனமான வளர்ச்சி மற்றும் விருத்தியுடனும் குறைந்த உற்பத்தித்திறன் மற்றும் வாழ்க்கை தரத்துடனும் கழிக்கின்றனர். வாழ்க்கைச் சுழற்சியின் போதான போசாக்கு என்பது தேசிய போசாக்கு கொள்கையைத் தவிர, தாய் மற்றும் சேய் நலக் (தா. சே.ந) கொள்கை, தொற்றா நோய்க் கொள்கை, முதியோர் நலக் கொள்கை ஆகியவற்றுடன் இனங்காணப்பட்டுள்ளது.

தொற்றா நோய்களுக்கு போசாக்கு குறைபாடு ஒரு ஆபத்து காரணியாக இருப்பதுடன், நாட்டின் பருநிலை, சமூகம் மற்றும் வீட்டு மட்டங்களில் பல தாக்கங்களையும் ஏற்படுத்துகின்றது. தனிப்பட்ட மற்றும்/அல்லது குடும்ப அடிப்படையிலான சிக்கல் பகுப்பாய்வு, தொடர்புடைய பங்குதாரர்களின் ஆதரவுடன் மும்மடங்கு போசாக்கு நடவடிக்கைகள் மற்றும் வாழ்க்கைச் சுழற்சி முழுவதும் சரியான போசாக்குப் பாராமரித்தல் ஆகியவை மக்கள்தொகையின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதோடு மட்டுமல்லாமல் நாட்டின் சமூக மற்றம் பொருளாதார வளர்ச்சிக்கும் முக்கியமானது ஆகும்.

வெவ்வேறு புவியியல் பகுதிகளிலும், நாட்டில் செல்வந்தர் குழுக்களிடையேயும் போசாக்கு ஒழுங்கின்மை இருப்பதனை நிரூபிக்கும் சான்றுகள் உள்ளன. குறிப்பாக மலையக மக்கள் மற்றும் நகர்புற ஏழைகள் பெரும்பாலும் போசாக்கு குறைபாட்டால் பாதிக்கப்படுகினறனர். நகரமயமாக்கல் காரணமாக உணவு பழக்கவழக்கங்களின் மாற்றங்கள் நகரப்புற மக்களின் போசாக்கு நிலையை பாதித்தன. தொற்றுநோய், அதிக போசாக்கு, நுண்ணூட்டச்சத்து குறைபாடுகளை குறைப்பதற்கான மும்மடங்கு போசாக்கு நடவடிக்கைகளுக்கு நிலையான பல்துறை அணுகுமுறையின் அவசியத்தைக் காட்டும் வகையில் தொற்றாநோய்கள் உள்ளவர்கள் ஆபத்தான முறையில் உயர்ந்து வருகின்றனர். காசநோய் மற்றும் பிற சுவாச நோய்கள் போன்ற தொற்று நோய்களினால் பாதிக்கப்பட்டவர்கள்; HIV மற்றும் எய்ட்ஸ் நோயுடன் வாழுகின்ற மக்கள்; அதீத உடல் பருமன், புற்றுநோய் மற்றும் மனநலப் பிரச்சினைகள் போன்ற தொற்று நோய் அல்லாத நோய்களை உடையவர்கள்; குழந்தைகள், முதியவர்கள் மற்றும் ஊனமுற்றோர் போன்ற விசேட கவனம் தேவைப்படுபவர்கள் போன்றவர்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்த கவனிக்கப்படவேண்டும்.

கொள்கை முன்னுரிமை பகுதி IV இற்கான முக்கிய மூலோபாய திசைகள் -

10.4.1. தங்கள் முதல் குழந்தையையோ அல்லது அடுத்தடுத்த பிரசவத்தினையோ திட்டமிட்டும் தம்பதிகள் கர்ப்பம் தரிக்க உச்சளவு போசாக்குடன் கூடிய ஆதரவான சூழலில் முன் கர்ப்ப கால பராமரிப்பினை வழங்குதல்.

10.4.2. கர்பிணிகளுக்கும் பிரசவத்திற்குப் பின்னரும் சரியான போசாக்கினை பாதுகாப்பதன் மூலம் (பிரசவத்திற்குப் பிறகு ஆறு மாதங்கள் நிறைவடையும் வரை) பெண்களுக்கு தேவையான போசாக்கு சேவைகளை வழங்குவதற்கான வலுப்படுத்தும் முறைமைகள் உறுதிசெய்தல்.

10.4.3. தாய்ப்பாலூட்டலை விரைவாக தொடங்கவும் ஆறு மாதங்கள் நிறைவடையும் வரை தனி தாய்ப்பாலூட்டலை சகல இடங்களிலும் மேற்கொள்ளக்கூடிய இயலுமான சூழலை உருவாக்கல்.

10.4.4. பின்வரும் போசாக்கு இடையீடுகளான பொருத்தமான, சத்தான, பாதுகாப்பான, வீட்டிலே தயாரிக்கப்பட்ட குறைநிரப்பு உணவுக்கு சிறப்பு முக்கியத்தவம் அளித்து இரண்டு வருடங்கள் மட்டுமே அன்றி அதற்கு மேலும் தாய்ப்பாலூட்டுவதன் மூலம் கைக்குழந்தைகள், இளஞ்சிறார்கள் மற்றும் முன்பள்ளி சிறார்களிடையே பலமான அடித்தளமொன்றை உருவாக்குதலும் உகந்த ஆரம்ப குழந்தை பராமரிப்பு மற்றும் விருத்தியினை மேம்படுத்துதல் (ECCD).

10.4.5. ஆரோக்கியமான உணவு பழக்கவழக்கங்கள் மற்றும் உடற்பயிற்சியுடனான போசாக்கு கல்வியினை அனைத்து முன்பள்ளி குழந்தைகளினதும் மனதில் பதியவைக்க பள்ளிப் பாடத்திட்டத்தின் மூலமும் ஆதரவான பாடசாலைச் சூழல் மூலமும் அதிகாரம் அளித்தல்.

10.4.6. கட்டிளம் பருவத்தினர் மற்றும் இளைஞர்களிடையே உகந்த போசாக்கு மற்றும் வளர்ச்சியை ஊக்குவித்தலுடன் கட்டிளம் பருவ மற்றும் இளைஞர் நட்பு அணுகுமுறைகளை பின்பற்றுதலும் சமூக நிர்ணயிப்பாளர்கள் தொடர்பில் அவதானம் செலுத்தலும்.

10.4.7. விரிவான போசாக்கு சேவைகளை வழங்குவதன் மூலம் ஆரோக்கியமான உணவு உட்பட ஆரோக்கியமான வாழ்க்கை முறைகளை பின்பற்ற வயதுவந்தவர்களுக்கு அதிகாரம் அளித்தல்.

10.4.8. முதியோர் யாவருக்குமான போசாக்கு சேவைகளுக்கான அணுகலை ஏற்படுத்துவதுடன், தேவையானளவு போசாக்கிற்கு ஏதுவான சூழலை ஏற்படுத்தல்.

10.4.9. பாதிக்கப்படக்கூடிய மக்களின் போசாக்கு நிலையை மேம்படுத்த பொருத்தமான தலையீடுகளை செயல்படுத்துதல்.

10.4.10. நோய் தொடர்பான (கடுமையான மற்றும் நாள்பட்ட) மந்த போசாக்கை தடுத்தலும் முகாமை செய்தலும்.

10.5. கொள்கை முன்னுரிமை பகுதி V இற்கான மூலோபாய திசைகள் - அவசரகால சூழ்நிலைகள் மற்றும் தீவிர வானிலை நிலைமைகளில் போசாக்கு மேம்பாடு

அனர்த்தம் ஏற்படக்கூடிய பகுதிகளை வரைபடம் வரைதல், அனர்த்தத்தினை முன்கணித்தல் மற்றும் அனர்த்தகளின் போது இலக்குப்படுத்தப்பட்ட போசாக்கு நடவடிக்கைகளுடன் சத்தான உணவு வழங்கல் ஆகியவை சமூக போசாக்கினை மேம்படுத்தவும் பாதுகாக்கவும் அவசியம். தொடர்ச்சியான மற்றும் நீடித்த வறட்சி மற்றும் வெள்ளம் குறிப்பாக ஆண்டுதோறும் குறிப்பிட்ட காலப்பகுதியில் மீண்டும் மீண்டும் ஏற்படுகின்றன. உணவு மதிப்புச் சங்கிலிகளின் நிலைத்திடு தன்மைக்கு உணவு முறைகளுக்கு காலநிலை மாற்றத்தையும் மீள்வருதன்மையையும் கருத்தில் கொள்ளவேண்டும்.
கொள்கை முன்னுரிமை பரப்பு V இற்கான பிரதான மூலோபாயத் திசைகள்.

10.5.1. மீள் எழுச்சி வழிமுறைகளை எளிதாக்குவதன் மூலம் பாதிக்கப்பட்ட மக்களின் போசாக்கு தேவைகளை வழங்க அனர்த்த தயாரிப்பு திட்டங்களை வலுப்படுத்துதல் மற்றும் நெறிப்படுத்துதல்.

10.5.2. செயல்பாட்டு வழிகாட்டுதல்களின் படி பாதிக்கப்பட்ட மக்களுக்கு போதுமான மற்றும் பாதுகாப்பான போசாக்கை உறுதி செய்வதற்காக நிகழ்ச்சத்திட்ட மேலாளர்கள் மற்றும் அவசர நிவாரண ஊழியர்கள் உள்ளிட்ட தொடர்புடைய பங்குதாரர்களுக்கு அதிகாரம் வழங்குதல்.

10.6. கொள்கை முன்னுரிமை பகுதி VI இற்கான மூலோபாய திசைகள் - மூலோபாய தகவல் மேலாண்மையும் ஆராய்ச்சியும்

குடித்தொகையின் போசாக்கு மட்டத்தை மேம்படுத்துவதற்கு ஆதாரங்களின் அடிப்படையில் இலக்குப்படுத்தப்பட்ட போசாக்கு நடவடிக்கைகள் நாட்டில் போசாக்கு குறைபாட்டை சமாளிக்க மிகவும் பயனுள்ளதாக இருக்கும். மூலோபாய தகவல் முறைமைகள், சரியான ஆராய்ச்சி சான்றுகள் வெவ்வேறு நிறுவன மட்டங்களில் திறமையான மற்றும் பயனுள்ள போசாக்கு திட்டங்களுக்கான முடிவெடுக்கும் செயன்முறையை ஆதரிக்கின்றன.

கொள்கை முன்னுரிமை பகுதி VI இற்கான முக்கிய மூலோபாய திசைகள்

10.6.1 ஆதாரங்கள் அடிப்படையிலான தகவல் கொள்கை மற்றும் திட்ட நிரல் முடிவுகள் எடுக்கப்படக்கூடிய சூழலை உருவாக்குவதற்கு மூலோபாய தகவல் முகாமைத்துவ முறைமைகளை வலுப்படுத்தல்.

10.6.2. ஒரு உணவு நடத்தை கண்காணிப்பை நிறுவி, அதை போசாக்கு கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டில் இணைத்தல்.

10.6.3. சான்றுகளை அடிப்படையாகக் கொண்ட தகவல்களை உருவாக்குவதற்கு பொருத்தமான ஆராய்ச்சியை ஆதரித்தல் மற்றும் இந்த சான்றுகளை பரிந்துரைத்தல், திட்டமிடல், செயல்படுத்தல் மற்றும் போசாக்கு தலையீடுகளை காலகாலம் மதிப்பிடுதல்.

11. கொள்கையின் எதிர்பார்க்கப்படும் தாக்கம்

இலங்கை குடித்தொகையினரிடையே போசாக்கு மட்டத்தை உயர்த்துவதே இக்கொள்கையின் மூலம் எதிர்பார்க்கப்படும் இறுதிப் பெறுபேறாக இருப்பதுடன் புவி சார்ந்த சமூக பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை குறைத்தலுமாகும். மேலும் இந்நோக்கத்திற்காக பின்வரும் பெறுபேறுகள் அடையப்படவும் வேண்டும்.

1. குறையூட்டம், மிகையூட்டம், நுண்ணூட்டச்சத்துக் குறைபாடுகள் முதலிய மந்த போசாக்கினை குறைத்தல்.
2. ஆரோக்கியமான உணவின் கிடைக்கும் தன்மை, அணுகல், மலிவு மற்றும் பயன்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் உணவு மற்றும் போசாக்கு பாதுகாப்பை அடைதல்.

11.1. இலங்கை மக்களிடையே மந்த போஷணை அடிப்படையில் குறைக்கப்பட்ட வழி வகைகள்;

11.1.1. குறையூட்டம்

11.1.1.1. ஐந்து வயதிற்குட்பட்ட சிறார்களிடையேயான குள்ளமாதல் 17.31% (DHS, 2016) இல் இருந்து 2030 இல் 10% ஆக குறைக்கப்பட்டது.

11.1.1.2. ஐந்து வயதிற்குட்பட்ட சிறார்களிடையே மெலிதலை 15.1% (DHS, 2016) இல் இருந்து <5% இக்கு குறைவாக 2030 ஆம் ஆண்டினுள் குறைக்கப்பட்டது

11.1.1.3. குறைந்த பிறப்பு எடையின் பரவலானது 15.7% (DHS, 2016) இல் இருந்து 2030க்குள் 10 % ஆகக் குறைக்கப்பட்டது.

11.1.1.4 10-18 வயதுடைய குழந்தைகளுக்கான குறைந்த உடல் திணிவு சுட்டி 26.9 % (தேசிய ஆய்வு, MRI, 2018) இலிருந்து 2030 க்குள் 18% ஆகக் குறைக்கப்பட்டது.

11.1.2. அதிக எடை மற்றும் அதீத உடல் பருமன்

11.1.2.1. 2030 க்குள் ஐந்து வயதிற்கு கீழ்ப்பட்ட சிறார்கள் மத்தியில் 0.6% (NS-MRI, 2012) என்ற அடிப்படை மட்டத்திலிருந்து அதிக எடை மற்றும் அதீத உடல் பருமனில் அதிகரிப்பு ஏற்படவில்லை.

11.1.2.2. 2030 க்குள் கட்டிளம் பருவத்தினர் மற்றும் வயதுவந்தோரிடையே முறையே 7.6% மற்றும் 2.2% (NS-MRI, 2018) என்ற அடிப்படையிலிருந்து அதிக எடை மற்றும் அதீத உடல் பருமனில் அதிகரிப்பு ஏற்படவில்லை.

11.1.2.3. பெரியவர்கள் மற்றும் வயதானவர்களிடையே (18-69 வயது) அதிக எடை பரவுதல் 29.3% (STEPS Survey, 2015) இலிருந்து 2030 க்குள் 15% ஆகக் குறைக்கப்பட்டது மற்றும் அதீத உடல் பருமன் 2030 ஆம் ஆண்டில் மேலும் 5 - 9% ஆகவும் குறைந்தது.

11.1.3 நுண்ணூட்டச்சத்து குறைபாடுகள்

11.1.3.1. ஐந்துவயதிற்கு கீழ்ப்பட்ட சிறார்கள், கட்டிளம் பருவத்தினர், வயதுவந்தோர் மற்றும் கர்பிணிப் பெண்கள் மத்தியில் அனைத்து நுண்ணூட்டச்சத்து குறைபாடுகளின் பரவலை 2030 க்குள் 10% க்கும் குறைவாக குறைதல்.

11.2 இலங்கை மக்களிடையே உணவுப் பாதுகாப்பையும் அவர்களின் பாதுகாப்பையும் அதிகரித்துள்ளது

11.2.1. உணவு சட்ட ரீதியான கட்டமைப்பு (Food Security)

11.2.1.1. வீடுகளில் உணவுப் பாதுகாப்பின்மை 10.3% (உணவு பாதுகாப்பு கணக்கெடுப்பு DCS, 2014) இலிருந்து 2030 க்குள் 5% ஆகக் குறைக்கப்பட்டது.

11.2.1.2. வீட்டு உணவுப்பாதுகாப்பின்மை அணுகல் அளவுகோல் (HFIAS) 9.2 (உணவு பாதுகாப்பு கணக்கெடுப்பு DCS, 2014) இலிருந்து 2030 இக்குள் 5 ஆகக் குறைக்கப்பட்டது.

11.2.2. உணவு பாதுகாப்பு (Food Safety)

11.2.2.1. நாட்டில் கிடைக்கும் அனைத்து உணவுகளும் நுகர்வுக்கு பாதுகாப்பானவை.

12. அமுல்படுத்தல்

தேசிய, மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச மட்டங்களில் போசாக்கு தொடர்பான நடவடிக்கைகளைத் திட்டமிடுதல், செயல்படுத்துதல், கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்வதற்கான வழிகாட்டும் ஆவணமாக தேசிய போசாக்கு கொள்கை காணப்படும். இது பொது, தனியார் மற்றும் தொழில்துறைகளுடன் தொடர்புடைய பல்வேறு வகையான பிரத்தியேகமானதும் உணர்திறன் மிக்கதுமானதுமான போசாக்கு உத்திகளை உள்ளடக்கியது. இது அரசாங்கத்தால், ஐக்கிய நாடுகள் சபை அல்லது நிறுவனங்களினதும் சில பகுதிகள், பிற அபிவிருத்தி பங்காளிகள், சிவில் சமூக நிறுவனங்கள் மற்றும் தனியார் துறை முகவர்கள் ஆகியோரால் வரையரையறுக்கப்பட்ட பொறுப்புகள் மூலம் அமுல்படுத்தப்படும். 2030 ஆம் ஆண்டு வரை இக்கொள்கை அமுல்படுத்தப்படுவதுடன், உயிர்ப்பாகவும் இருக்கும். தேவைப்படுமிடத்து புதிப்பிக்க வாய்ப்பளிப்பதற்கு 2025 ஆம் ஆண்டில் ஒரு இடைக்கால ஆய்வு நடத்தப்படும்.

கொள்கையை திறம்பட செயற்படுத்த நிலையான மற்றும் செயல்திறன் மிக்க நிறுவன வழிமுறைகள் கட்டாயமாகும். சுகாதார அமைச்சகம் இக் கொள்கையை விருத்தி செய்ய தலைமை தாங்குவதுடன், திட்டமிடல், அமுல்படுத்தல், கண்காணித்தல் மற்றும் போசாக்கு சுகாதார தலைமைத் திட்டத்துடன் இணைந்த ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்ட விசேட போசாக்கு நடவடிக்கைகளின் மதிப்பீடு என்பவற்றுக்கு பொறுப்பாகின்றது. குறித்த அமைச்சுக்களின் ஆணையின் படி மறைமுக போசாக்கு உணர்திறன் மிக்க நடவடிக்கைகள் அமுல்படுத்தப்படுகின்றன.

ஜனாதிபதி செயலகத்தில் செயல்படும் தேசிய போசாக்கு செயலகத்தினால் போசாக்கிற்கான பல் துறை செயற்திட்டம் (MsANP) 2018-2025 தயாரிக்கப்பட்டதுடன் இது விசேடத்துவமும் உணர்திறனும் மிக்க நேரடி மற்றும் மறைமுக போசாக்கு நடவடிக்கைகளின் ஒருங்கிணைப்பு, கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு ஆகியவற்றிற்கு பொறுப்பாகும்.

தேசிய போசாக்கு கொள்கை மற்றும் போசாக்கிற்கான பல் துறை செயற்திட்டம் என்பன தேசிய, மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச மட்டங்களில் வினைத்திறனுடன் ஒருங்கமைக்கப்பட்டு, கண்காணிக்கப்பட்டு, மதிப்பிடப்பட வேண்டும். தேசிய மட்டத்தில் தேசிய போசாக்கு கொள்கை ஆனது உயர் மட்ட ஒருங்கிணைப்பு குழுமம் மற்றும் பொருத்தமான அமைச்சுக்களின் உயர்மட்ட பிரதிநிதிகளை உள்ளடக்கிய வழிகாட்டல் குழுவினால் ஒருங்கிணைக்கப்படுவதுடன் தேசிய அளவில் முக்கியமான சான்றுகளை அடிப்படையாகக் கொண்ட முக்கியத்துவம் வாய்ந்த தேசிய போசாக்கு கொள்கை முடிவுகளை எடுத்து நடவடிக்கைகளை கண்காணிக்கவேண்டும்.

தேசிய போசாக்கு கொள்கையானது கொள்கை முன்னுரிமைப் பகுதிகளின் அடிப்படையில் நடவடிக்கைக்கான மூலோபாய கட்டமைப்பை வரையறுப்பதுடன் பிரதான மூலோபாய திசைகளையும் அடையாளப்படுத்துகின்றது. மூலோபாய கட்டமைப்பில் ஒவ்வொரு மூலோபாய திசையின் கீழும் பிரதான தொழிற்பாட்டுப் பகுதிகள், எதிர்பார்க்கப்படும் பெறுபேறுகள் மற்றும் கண்காணித்தல் குறிகாட்டிகள் ஆகியவை உள்ளடங்கும். தேசிய போசாக்கு கொள்கையை செயல்படுத்துவதற்கான சாத்தியமான பொறுப்பான துறைகள் அல்லது அமைப்புகளையும் இது அங்கீகரிக்கிறது. இவ் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டுதல்களின் அடிப்படையில் மாகாணங்களும் போசாக்கு தொடர்பான முகவர்களும் பிற முகவர்களும் தங்கள் போசாக்கு தொடர்பான மூலோபாய திட்டங்களை விருத்திசெய்யலாம். இந்த மூலோபாயத் திட்டங்கள் அனைத்தும் ஆண்டு முழுவதும் செயல்படுத்தப்படும் வகையில் செலவிடப்பட வேண்டும்.

12.1. போசாக்குக்கான பல்துறை செயல் திட்டங்களின் ஒருங்கிணைப்பு

பின்வரும் பல்துறை ஒருங்கிணைப்பு தளங்கள் தேசிய, மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச மட்டங்களில் எம்.எஸ்.ஏ.பி.என் (MsAPN) செயல்படுத்துவதற்கான திறமையான ஒருங்கிணைப்பு, கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டை உறுதிசெய்கின்றன.

i. தேசிய போசாக்கு கவுன்சில் (NNC) :

மேதகு ஜனாதிபதியின் தலைமையில் கொள்கை வழிகாட்டுதலையும் போசாக்கு தொடர்பான கொள்கை அளவிலான முடிவெடுப்பதை வழங்குவார். என்.என்.சி (NNC) ஆண்டுக்கு இரண்டு முறை கூடி, அனைத்து தொடர்புடைய அரசியல் அமைச்சர்களையும், மாகாணங்களின் முதலமைச்சர்களையும், அனைத்து அரசியல் கட்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களையும், மற்றைய பங்குதாரர்களின் தலைவர்களையும் உள்ளடக்கிய அரசியல் அதிகாரத்தை ஒன்றிணைக்கிறது.

ii. தேசிய போசாக்கு செயலகம் (NNS) :

தேசிய போசாக்கு கவுன்சிலின் செயலகக் குழுவாகும், இது ஜனாதிபதி செயலகத்தின் கீழ் உள்ளது. எம்.எஸ்.ஏ.பி.என் (MsAPN) இன் ஒருங்கிணைத்தல், கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் ஆகியவற்றிற்கு என்.என்.எஸ் (NNS) முக்கியமாக பொறுப்பாகும்.

iii. போசாக்கிற்கான தேசிய வழிநடத்தல் குழு (NSCN):

ஜனாதிபதியின் செயலாளர் தலைமை தாங்குகிறார். என்.எஸ்.சி.என் (NSCN) காலாண்டுக்கு ஒரு முறை சந்தித்து அமைச்சகங்களின் செயலாளர்கள், மாகாணங்களின் தலைமை செயலாளர்கள், கல்வியாளர்கள், ஐ.நா. முகவர், சிவில் சமூகம் மற்றும் தனியார் துறை அமைப்புகள் உள்ளிட்ட வளர்ச்சி பங்காளிகளின் பிரதிநிதிகளை ஒன்றிணைக்கிறது. செயல்பாட்டின் ஒட்டுமொத்த முன்னேற்றத்தை என்.எஸ்.சி.என் (NSCN) அமுலாக்கத்தின் முன்னேற்றத்தை மதிப்பாய்வு செய்து போசாக்கு தொடர்பான குறிகாட்டிகளை மேம்படுத்த பல துறை ஆதரவை கோரும். இங்கு முன்வைக்கப்பட்டுள்ள குறிப்பிட்ட கொள்கை முன்மொழிவுகள் உயர்மட்ட தலையீட்டிற்காக தேசிய போசாக்கு கவுன்சிலுக்கு அனுப்பப்படவேண்டும்.

iv. போசாக்கு தொழினுட்ப ஆலோசனைக் குழு (TACN):

என்.எஸ்.சி.என் இன் செயற்பாடுகளை ஆதரிப்பதற்கான தொழினுட்பக் குழுவாக இருக்கும். போசாக்குக்கான பலதுறை செயல் திட்டம் (எம்.எஸ்.ஏ.பி.என்) மற்றும் பிற போசாக்கு தொடர்பான கொள்கைகள் மற்றும் உத்திகளை செயல்படுத்த தொழினுட்ப வசதிகளை வழங்குவதற்காக நிறுவப்பட்டது **தொழினுட்ப** குழுவாகும். போசாக்கு தொழினுட்ப ஆலோசனைக் குழு அரசு, ஐ.நா மற்றும் பிற மேம்பாட்டு பங்காளிகள், கல்வியாளர்கள், சிவில் சமூகம் மற்றும் தனியார் துறை நிறுவனங்கள் போன்ற பல்வேறு துறைகளைச் சேர்ந்த **தொழினுட்ப** நிபுணர்களை ஒன்றிணைத்து போசாக்கு பிரச்சினைகள் குறித்த **தொழினுட்ப** வழிகாட்டுதல்களை வழங்குகிறது.

v. **போசாக்கு குறித்த அமைச்சக வழிகாட்டல் குழுக்கள்:**

சம்பந்தப்பட்ட அமைச்சக செயலாளர்கள் தலைமை தாங்கும் போசாக்கு தொடர்பான பரிந்துரைகள் TACN இக்கு தெரிவிக்கப்படும். இந்த அமைச்சக வழிநடத்தல் குழுக்களின் கீழ், அமைச்சகத்தின் கட்டளைப்படி போசாக்கு குறித்து பரிந்துரைகளை வழங்க **தொழினுட்பக்** குழுக்கள் அமைக்கப்படலாம்.

vi. **போசாக்கிற்கான மாகாண வழிநடத்தல் குழு (PSCN):**

மாகாணத்தின் தலைமைச் செயலாளர் தலைமை தாங்குகிறார். பி.எஸ்.சி.என் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூடி மாகாண அமைச்சகங்களின் செயலாளர்கள், சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்களின் துறைத் தலைவர்கள், அபிவிருத்தி பங்காளிகளின் பிரதிநிதிகள், கல்வித்துறை, சிவில் சமூகம் மற்றும் மாகாணத்தில் பணிபுரியும் தனியார் துறை ஆகியவற்றை ஒன்றிணைக்கிறது.

vii. போசாக்கிற்கான மாவட்ட வழிநடத்தல் குழு (DisSCN):

மாவட்ட செயலாளர் தலைமை தாங்குகிறார். டி.எஸ்.சி.என் இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை கூடி, சம்பந்தப்பட்ட அரசு நிறுவனங்களின் துறைத் தலைவர்கள், வளர்ச்சி பங்காளிகளின் பிரதிநிதிகள், கல்வியாளர்கள், சிவில் சமூகம் மற்றும் மாவட்டத்தில் பணிபுரியும் தனியார் துறை அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியவற்றை ஒன்றிணைக்கிறது.

viii. போசாக்கிற்கான பிரதேச வழிநடத்தல் குழு (DivSCN):

பிரிவின் பிரதேச செயலாளர் தலைமை தாங்குகிறார். பிரதேச மட்டத்தில் டி.வி.எஸ்.சி.என் (DivSCN) ஒரு மாதத்திற்கு ஒரு முறை கூடி, சம்பந்தப்பட்ட அரசு நிறுவனங்களின் துறைத் தலைவர்கள், அபிவிருத்தி பங்காளிகளின் பிரதிநிதிகள், கல்வித்துறை, சிவில் சமூகம் மற்றும் பிரிவில் பணிபுரியும் தனியார் துறை நிறுவனங்கள் ஆகியவற்றை ஒன்றிணைக்கிறது.

மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச வழிநடத்தல் குழுக்கள் உள்ளூர் மட்டத்தில் மாவட்ட போசாக்கு செயல் திட்டங்களை (டி.என்.ஏ.பி) செயல்படுத்துவதை கண்காணிக்கும் முக்கிய அமைப்புகளாக இருக்கும். உள்ளூர் போசாக்கு பிரச்சினைகள் பல துறை ஒருங்கிணைப்பு மூலம் தீர்க்கப்படுவதை அவர்கள் உறுதி செய்வார்கள்.

12.2. தேசிய போசாக்கு கொள்கையின் கண்காணிப்பும் மதிப்பீடும்

பலதுறை போசாக்கு நடவடிக்கைகளை நேரடியாகவும் மறைமுகமாகவும் கண்காணிக்கவும் மதிப்பீடு செய்யவும் தேசிய போசாக்கு செயலகத்தில் (NNS) ஒரு மூலோபாய தகவல் மேலாண்மை (SIM) பிரிவு நிறுவப்படும். சுகாதார அமைச்சகத்தின் போசாக்குப் பிரிவில் உள்ள மூலோபாய தகவல் மேலாண்மை (SIM) பிரிவு நேரடி போசாக்கு தலையீடுகளின் முடிவுகளை கண்காணிப்பதற்கும் மதிப்பீடு செய்வதற்குமான ஒரு மைய புள்ளியாக இருக்கவேண்டும், மேலும் இது என்.என்.எஸ். (NNS) உடன் தொடர்பு கொள்ளும்.

நடவடிக்கைக்கான மூலோபாய கட்டமைப்பு

முன்னுரிமைப்படுத்தப்பட்ட கொள்கைப் பரப்பு I : அனைத்து குடிமக்களுக்கும் உணவு மற்றும் போசாக்கு பாதுகாப்பு				
மூலோபாய திசைகள்/ வழிகாட்டுதல்	**பிரதான செயற்பாட்டு பகுதிகள்**	**2030 க்குள் குறிகாட்டிகள் மற்றும்/ அல்லது இலக்குகளை கண்காணித்தல்**	**பொறுப்புக் கூறும் பிரதான நிறுவனங்கள் அல்லது அமைப்புகள்**	**மூலோபாய திசையில் எதிர்பார்க்கப்படும் பலாபலன்கள் அல்லது விளைவுகள்**
1.1. போசாக்கு உணர்திறன் மிக்க உணவு மதிப்பு சங்கிலி மூலம் தரமானதும் ஆரோக்கியமானதுமான உணவுக்கான சமமான கிடைப்பனவு அணுகலை மேம்படுத்துதல்.	1.1.1.அ) ஆரோக்கிமான உணவு கிடைப்பனவு மற்றும் அனுகலை மேம்படுத்துவதற்கு நிலையான போசாக்கு உணர்திறன் உணவு மதிப்பு சங்கிலிகளை (விவசாயம், கால்நடைகள், மீன் வளர்ப்பு போன்றவையை) வலுப்படுத்துதல். 1.1.1.ஆ) பருவகால, பாரம்பரிய மற்றும் அதிகளவில் பிரயோசனப்படுத்தாத பயிர்கள் உள்ளடங்கலாக அதிக விளைச்சல் தரும், சத்தான மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட தரமான விவசாய உற்பத்திபொருட்கள் கிடைப்பதனை உறுதிசெய்தல். 1.1.1.இ) விவசாயத் துறையின் மூலம் காய்கறிகள், வித்துக்கள் மற்றும் பருப்பு வகைகள் நிலையான முறையில் கிடைப்பதனையும் அணுகலையும் உறுதிசெய்தல்.	1.1.1.1. மதிப்பிடப்பட்ட வருடாந்த தேவையில் (உற்பத்தி + இறக்குமதி) / தேவை) x100) பொதுவாகப் பயன்படுத்தப்படும் உணவின் கிடைக்கும் விகிதம். (ஆதாரம் - விவசாய அமைச்சகம்) (2020 ஆம் ஆண்டுக்கான பொதுவாகப் பயன்படுத்தப்பட்ட உணவுத் தேவையின் வருடாந்த மதிபீடு மெட்ரிக் டன்களில் (MT) இணைக்கப்பட்டுள்ளது) 1.1.1.2. வீட்டு உணவு பாதுகாப்பின்மை அனுகல் அளவு மதிப்பெண் (HFIAS)யை 9.2 (2014) இலிருந்து 5 ஆக குறைத்தல். (ஆதாரம் - DCS)	- தேசிய போசாக்கு செயலகம் (தே.போ.செ) - விவசாயம் - கால்நடைகள் - மீன்வளம் - வணிகம் - நிதி	1.1.1. நாட்டில் நுகர்வுக்குப் போதுமான அளவில் தரமானதும் ஆரோக்கியமானதுமான விவசாய உணவுப் பொருட்கள் கால்நடைகள் மற்றும் மீன்வளப் பொருட்கள் கிடைக்கின்றன. 1.1.2. அனைத்து குடிமக்களுக்கும் ஆண்டு முழுவதும் தரமான மற்றும் ஆரோக்கியமான உணவுக்கான அணுகல் உறுதிசெய்யப்பட்டது. 1.1.3. தரமான மற்றும் ஆரோக்கியமான உணவிற்கான ஒழுங்குவிதிகள் மற்றும் கண்காணிப்பு பொறிமுறைகள் நாட்டில் கிடைக்கப் பெற்றுள்ளன.

மூலோபாய திசைகள்/ வழிகாட்டுதல்	பிரதான செயற்பாட்டு பகுதிகள்	2030 க்குள் குறிகாட்டிகள் மற்றும்/ அல்லது இலக்குகளை கண்காணித்தல்	பொறுப்புக் கூறும் பிரதான நிறுவனங்கள் அல்லது அமைப்புகள்	மூலோபாய திசையில் எதிர்பார்க்கப்படும் பலாபலன்கள் அல்லது விளைவுகள்
	1.1.2. பாதுகாப்பான மற்றும் சத்தான உணவு கிடைப்பதனையும் அனுகுவதனையும் மேம்படுத்தவதற்கு வீட்டுத் தோட்டத்தை ஊக்குவித்தல்.	1.1.2.1. பிரதேச மட்டத்தில் அளவு மற்றும் வகையால் நிறுவப்பட்ட வீட்டுத் தோட்டங்களின் சதவீத்தை அடித்தள மட்டத்திலிருந்து 30% இனால் அதிகரித்துள்ளது. (ஆதாரம் - பிரதேச செயலக தரவுத்தளங்கள்)	- விவசாயம் - சமூக அதிகாரம் - மாகாண/உள்ளூர் அரசாங்கங்கள்	1.1.4. அறுவடைக்குப் பின்னரானஉணவு இழப்பைக் குறைக்க உள்கட்டமைப்பு மேம்படுத்தப்பட்டது. 1.1.5. உணவு இறையான்மை மற்றும் ஆரோக்கியமான உணவுக்காக உருவாக்கப்பட்ட சுற்றுச்சூழல் சமூகங்களின் மத்தியில் செயல்படுத்தப்பட்டது.
	1.1.3. உள்ளூர் இனங்களுடன் கொல்லைப்புற உள்நாட்டு வீட்டு கால்நடை வளர்ப்பை வலுப்படுத்துதல்.	1.1.3.1. ஒவ்வொரு GN பகுதிகளிலும் மதிப்பிடப்பட்டவற்றில் கொல்லைப்புற கால்நடை வளர்ப்பிற்கு போதுமான அளவு ஆதரவளிக்கப்பட்ட குடும்பங்களின் விகிதம் அடிப்படை மட்டத்திலருந்து 30% இனால் அதிகரித்துள்ளது. (ஆதாரம் - பிரதேச செயலக தரவுத்தளங்கள்)	- கால்நடைகள் - சமூக அதிகாரம் - மாகாண/உள்ளூர் அரசாங்கங்கள்	
	1.1.4. மேம்படுத்தப்பட்ட நிலப் பயன்பாட்டு திறன், போதுமான நீர்ப்பாசன வசதிகள் மற்றும் பயிர் தீவிரத்தை அதிகரிப்பதன் மூலம் உணவுப் பாதுகாப்பை மேம்படுத்துதல்.	1.1.4.1. விவசாய நிலபயன்பாட்டு திறன் அடிப்படையிலிருந்து 10% அதிகரித்துள்ளது. (ஆதாரம் - விவசாய திணைக்களம் / DOA)	- தேசிய திட்டமிடல் - நீர்ப்பாசனம் - விவசாயம்	
	1.1.5. அறுவடைக்குப் பின்னரான தொழில்னுட்பங்கள், விநியோகச் சங்கிலிக்கு பொருத்தமான போக்குவரத்து மற்றும் களஞ்சிய வசதிகளை மேம்படுத்துவதன் மூலம் அறுவடைக்கு பின்ரான இழப்புக்களைக் குறைத்தல்.	1.1.5.1. உணவு இழப்புக் குறியீடு அடிப்படை மட்டத்திலிருந்து 30% இனால் குறைக்கப்பட்டது. (ஆதாரம் - மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளியியல் துறை/ DCS)	- விவசாயம் - கால்நடைகள் - மீன்வளம் - மாகாண/ உள்ளூர் அரசாங்கங்கள் - போக்குவரத்து	

மூலோபாய திசைகள்/ வழிகாட்டுதல்	பிரதான செயற்பாட்டு பகுதிகள்	2030 க்குள் குறிகாட்டிகள் மற்றும்/ அல்லது இலக்குகளை கண்காணித்தல்	பொறுப்புக் கூறும் பிரதான நிறுவனங்கள் அல்லது அமைப்புகள்	மூலோபாய திசையில் எதிர்பார்க்கப்படும் பலாபலன்கள் அல்லது விளைவுகள்
			விஞ்ஞானம் மற்றும் தொழினுட்டம் -நிதி	
	1.1.6. சுற்றுச்சூழல் நட்பு உணவு மதிப்பு சங்கிலிகளை ஊக்குவித்தல்.	1.1.6.1. பதிவு செய்யப்பட்ட மொத்த பண்ணைகளில் நல்ல விவசாய நடைமுறைகளுக்கு (GAP) சான்றளிக்கப்பட்ட பண்ணைகளின் விகிதம். (ஆதாரம் - DOA)	- விவசாயம் - கால்நடைகள் - சுற்றுச்சூழல்	
	1.1.7. உணவு விநியோகச் சங்கிலி மேலாண்மையுடன் (தரமான உணவு உற்பத்தி, அறுவடைக்கு பின்னரான உணவு இழப்பை குறைத்தல், உணவு இறையாண்மை[15] போன்றவை) சம்பந்தப்பட்ட அனைத்து பங்குதாரர்களுக்கும் அதிகாரம் அளித்தல்.	1.1.7.1. மாகாணம், மாவட்டம் மற்றும் பிரதேச மட்டங்களில் அடையாளம் காணப்பட்ட பயிற்சி பெற்ற பங்குதாரர்களின் விகிதம். (ஆதாரம் - மாகாண ஆலோசனைகள், மாவட்ட மற்றும் பிரதேச செயலக தரவுத்தளங்கள்).	- விவசாயம் - கால்நடைகள் - மீன்வளம் - வணிகம் - நிதி	
	1.1.8. உணவு பாதுகாப்பு கண்காணிப்பை வலுப்படுத்துதல். (உதாரணம் - உணவின் விளைச்சல் மற்றும் தரம், முன்னறிவிப்பு உற்பத்தி மற்றும் இறக்குமதி ஆகியவற்றைக் கண்காணித்தல்,	1.1.8.1. திட்டமிடப்பட்ட காலங்களில் (ஒவ்வொரு மூன்று வருடங்களுக்கும்) உணவு பாதுகாப்பு கணக்கெடுப்பு அறிக்கைகளின் கிடைப்பனவுத் தன்மை. (ஆதாரம் - விவசாய அமைச்சகம்) 1.1.8.2. ஆண்டுக்கு இரு முறை உணவு கணக்கெடுப்பிற்கான செலவு அறிக்கைகளின் கிடைப்பனவுத் தன்மை. (ஆதாரம் - விவசாய அமைச்சகம்)	- விவசாயம் - கால்நடைகள் - மீன்வளம் - வணிகம்	

15 - இற்கான வரைவிலக்கணங்களுக்கு சொற்களஞ்சியத்தை பார்க்குக

	4.6.3. வயதுக்கு தகுந்த சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து கல்வி உட்பட பாடசாலை சுகாதார திட்டத்தை நெறிப்படுத்துதல்	4.6.3.1. பள்ளி பருவ வயதினருக்கான வயதுக்கு ஏற்ற உடல் நலம் மற்றும் ஊட்டச்சத்து கல்வியினை 100% இனால் பூரணப்படுத்துதல். (ஆதாரம் - கல்வி அமைச்சகம்)	- சுகாதாரம் - கல்வி - தேசிய மருத்துவம்	

25 - 26 இற்கான வரைவிலக்கணங்களுக்கு சொற்களஞ்சியத்தை பார்க்குக

மூலோபாய திசைகள்/ வழிகாட்டுதல்	பிரதான செயற்பாட்டு பகுதிகள்	2030 க்குள் குறிகாட்டிகள் மற்றும்/ அல்லது இலக்குகளை கண்காணித்தல்	பொறுப்புக் கூறும் பிரதான நிறுவனங்கள் அல்லது அமைப்புகள்	மூலோபாய திசையில் எதிர்பார்க்கப்படும் பலாபலன்கள் அல்லது விளைவுகள்
		4.6.3.2. தேசிய இளம்பருவத்தினர் இடையேயான ஊட்டச்சத்து ஆய்வு (MRI) மற்றும் உலகளாவிய பள்ளி சுகாதார ஆய்வு (FHB) ஆகியவற்றின் அறிக்கைகள் திட்டமிடப்பட்ட இடைவெளியில் கிடைக்கும் தன்மை. 4.6.3.3. 10-18 வயதையுடைய குழந்தைகளிடையே மெலிந்த தன்மையின் பாதிப்பு 26.9% (MRI,2018) இலிருந்து 18% ஆகக் குறைக்கப்பட்டது. 4.6.3.4. 10-18 வயதையுடைய குழந்தைகளிடையே குள்ளமாதல் 13.0% (MRI,2016) இலிருந்து 10% ஆகக் குறைக்கப்பட்டது.		4.6.6. அனைத்து இளைஞர்களும் ஆரோக்கியமான வாழ்க்கை முறைகளைக் கடைப்பிடிக்க அதிகாரம் பெற்றுள்ளனர். 4.6.7. ஆரோக்கியமான நடத்தைகளை ஊக்குவிக்க இளைஞர் பயிற்சி நிறுவனங்கள் உதவுகின்றன. 4.6.8. உலகளாவிய பாடசாலை சுகாதார கணக்கெடுப்பு தவறாமல் தொடர்ந்து நடத்தப்படுகிறது.
	4.6.4. சுற்றுச்சூழலை செயல்படுத்துவதன் மூலம் அனைத்து பாடசாலைச் சிறுவர்களினதும் இளைஞர்களினதும் உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்துதல்.	4.6.4.1. பள்ளி செல்லும் இளம் பருவத்தினரின் விகிதாச்சாரம் பள்ளி செல்லும் அனைத்து இளம் பருவத்தினரிடமிருந்தும் உடல் தகுதிக்காக மதிப்பிடப்படுகிறது . (ஆதாரம் - கல்வி அமைச்சகத்தின் தரவுத்தளம்) 4.6.4.2. கல்வித் துறையில் தகவல் அமைப்பில் உடல் தகுதி மற்றும் போசாக்கு நிலை பற்றிய தகவல்களின் கிடைக்கும் தன்மை.	- நிதி - தேசிய திட்டமிடல் - நகர்புற அபிவிருத்தி - கல்வி - குழந்தைகள் செயலகம் - விளையாட்டு - இளைஞர்கள் - உள்ளூர் அதிகாரிகள்	

மூலோபாய திசைகள்/ வழிகாட்டுதல்	பிரதான செயற்பாட்டு பகுதிகள்	2030 க்குள் குறிகாட்டிகள் மற்றும்/ அல்லது இலக்குகளை கண்காணித்தல்	பொறுப்புக் கூறும் பிரதான நிறுவனங்கள் அல்லது அமைப்புகள்	மூலோபாய திசையில் எதிர்பார்க்கப்படும் பலாபலன்கள் அல்லது விளைவுகள்
		4.6.4.3. ஒரு வாரத்தில் 7 நாட்களுக்கும் குறைந்தது 60 நிமிடங்கள் உடல் ரீதியாக சுறுசுறுப்பாக இருக்கும் 13 - 17 வயதுடைய மாணவர்களின் விகிதம் 15.5% இலிருந்து 50% அல்லது அதற்கு மேல் அதிகரித்தல். 4.6.4.4. ஒரு நாளைக்கு மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட மணி நேரங்கள் உட்கார்ந்து தொலைக்காட்சி பார்த்தல், கணினி விளையாட்டுகள் விளையாடுவது அல்லது நண்பர்களுடன் பேசுவது, மற்றும் பாடசாலைகள் இல்லாத போது அல்லது வழக்கமான நாளில் வீட்டுப் பாடங்கள் செய்யாது இருக்கும் 13 – 17 வயதுடைய மாணவர்களின் விகிதத்தை 37.3% இலிருந்து 10% ஆகக் அல்லது அதிலும் குறைவாகக் குறைத்தல். (ஆதாரம்- GSHS 2016)		
	4.6.5. இளம் பருவத்தினர் மற்றும் இளைஞர்களிடையே ஆரோக்கியமான உணவு, உடல் செயல்பாடு மற்றும் உளவியல் ஆதரவை மேம்படுத்துவதற்காக இளம் பருவத்தினர் மற்றும் இளைஞர்களுக்கு ஏற்ற சுகாதார சேவைகள் (AYFHS) மையங்களை நிறுவுதல்/நெறிப்படுத்துதல்.	4.6.5.1. AYFHS இன் மையங்களால் வருடாந்தம் நடத்தப்படும் திட்டமிடப்பட்டதற்கு மேலாக நடத்தப்பட்ட போசாக்கு மற்றும் உடல் செயற்பாடு குறிதத திட்டங்களின் விகிதம். (ஆதாரம் - மாவட்ட மீளாய்வுத் தரவுகள்)	- சுகாதாரம் - கல்வி - உயர்கல்வி - தொழில் பயிற்சி - இளைஞர்கள்	

மூலோபாய திசைகள்/ வழிகாட்டுதல்	பிரதான செயற்பாட்டு பகுதிகள்	2030 க்குள் குறிகாட்டிகள் மற்றும்/ அல்லது இலக்குகளை கண்காணித்தல்	பொறுப்புக் கூறும் பிரதான நிறுவனங்கள் அல்லது அமைப்புகள்	மூலோபாய திசையில் எதிர்பார்க்கப்படும் பலாபலன்கள் அல்லது விளைவுகள்
		4.6.5.2. முந்தைய வாரத்தில் ஆரோக்கியமற்ற உணவை உட்கொள்ளாத இளம் பருவத்தினர் மற்றும் இளைஞர்களின் (15-24 வயது) விகிதம் 33.4% இலிருந்து 40 % வரை மேம்படுத்தப்பட்டுள்ளது. (ஆதாரம் - தேசிய இளைஞர் சுகாதார ஆய்வு, 2012)		
	4.6.6. உயர் கல்வி நிறுவனங்கள், தொழில் பயிற்சி மையங்கள் மற்றும் வேலைத்தளங்களில் இளைஞர்களிடையே போசாக்கு நிலையை மதிப்பிடுவதற்கான வழிமுறைகளை நிறுவுதல்.	4.6.6.1. திட்டமிடப்பட்ட கால இடைவெளியில் தேசிய இளைஞர் சுகாதார ஆய்வு அறிக்கைகளின் கிடைப்பனவுத் தன்மை.	- சுகாதாரம் - உயர் கல்வி - தொழில் பயிற்சி - இளைஞர்கள்	
	4.6.7. அனைத்து இளைஞர்களுக்கான கல்வி, பயிற்சி மற்றும் வேளைத்தளங்களுக்கும் போதுமான நீர், சுகாதாரம் மற்றும் சுகாதார (கழுவும்) வசதிகளை வழங்குதல்.	4.6.7.1. தேசிய விதிமுறைகளின் (e-EOH&FS) படி அனைத்து கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள்/ வேளைத்தளங்களில் கழுவுவதற்கான வசதிகள் ஆற்றெல்லை பாதுகாக்கப்பட்டுள்ளது.	- உள்ளூர் அதிகாரிகள் - நீர் விநியோகம்	
4.7. விரிவான போசாக்கு சேவைகளை வழங்குவதன் மூலம் ஆரோக்கியமான உணவு உட்பட	4.7.1. ஆரோக்கியமான உணவுக்கான உணவு அடிப்படையிலான உணவுமுறை வழிகாட்டுதல்களை (FBDG) நெறிப்படுத்துதல்.	4.7.1.1. திருத்தப்பட்ட FBDGs க்களைப் பரப்புவதற்கான மூலோபாய சந்தைப்படுத்தல் மற்றும் தகவல் தொடர்புத் திட்டத்தின் கிடைக்கும் தன்மை.	- சுகாதாரம் - சுதேச மருத்துவம் - விவசாயம்/ கால்நடைகள்/ மீன்வளர்ப்பு	4.7.1. தேசிய மற்றும் உள்ளூர் அரசாங்கக் கொள்கைகள், சட்டங்கள் மற்றும் வழகாட்டுதல்கள் ஆரோக்கியமான உணவு

மூலோபாய திசைகள்/ வழிகாட்டுதல்	பிரதான செயற்பாட்டு பகுதிகள்	2030 க்குள் குறிகாட்டிகள் மற்றும்/ அல்லது இலக்குகளை கண்காணித்தல்	பொறுப்புக் கூறும் பிரதான நிறுவனங்கள் அல்லது அமைப்புகள்	மூலோபாய திசையில் எதிர்பார்க்கப்படும் பலாபலன்கள் அல்லது விளைவுகள்
ஆரோக்கியமான வாழ்க்கை முறைகளை பின்பற்ற வயது வந்தவர்களுக்கு அதிகாரம் அளித்தல்.		4.7.1.2. திருத்தப்பட்ட FBDGs க்களைப் பரப்புவதற்கான மூலோபாய சந்தைப்படுத்தல் மற்றும் தொடர்புத் திட்டத்தில் குறைந்த பட்சம் 10% மான நடவடிக்கைகள் வருடந் தோறும் நிறைவு செய்யப்படுகின்றன.	- வணிகம் - நுகர்வோர் விவகார ஆணையம் - விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பம் - உள்ளூர் அரசு - விளையாட்டு - கல்வி - ஊடகம்	கிடைப்பதை மேம்படுத்துவதற்கும் உடல் செயல்பாடு மற்றும் போதைப்பொருள் துஷ்பிரயோகத்தைத் தடுப்பதற்கும் ஏதுவாக உள்ளது. 4.7.2. பெரியவர்களிடையே போசாக்கு குறைபாடு குறைகிறது. 4.7.3. வேலைத்தளங்களில் உணவக கொள்கையை நடைமுறைப்படுபிறது. 4.7.4. ஆரோக்கியமான உணவு விற்பனை நிலையங்கள் மற்றும் உடல் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கான வசதிகள் சமூக அளவில் நிறுவப்பட்டுள்ளன.
	4.7.2. அனைத்து அமைப்புகளிலும் சாதகமான சூழலின் மூலம் ஆரோக்கியமான உணவு நடத்தைகளை வளர்க்க பெரியவர்களுக்கு அதிகாரம் அளித்தல்.	4.7.2.1. 30-44 வயதுவர்களிடையே அதிக எடையின் பாதிப்பு 27.4% (STEP, 2015) இலிருந்து 24.0% ஆகக் குறைக்கப்பட்டது. 4.7.2.2. 18-59 வயதுடைய பெரியவர்களிடையே அதிக எடையின் பாதிப்பு 28.2% (STEP, 2015) இலிருந்து இல் 26.0% ஆகக் குறைக்கப்பட்டது. 4.7.2.3. 18-59 வயதுக்குட்பட்ட பெரியவர்களிடையே அதீத உடல் பருமன் பாதிப்பு 5.9% (STEP, 2015) இலிருந்து 3.0% ஆகக் குறைக்கப்பட்டது	- சுகாதாரம் - சுதேச மருத்துவம் - விவசாயம்/ கால்நடைகள்/ மீன்வளர்ப்பு - வணிகம் - சமூக அதிகாரம் - குழந்தைகள் செயலகம் - விளையாட்டு . இளைஞர்கள் - உள்ளூர் அதிகாரசபை	

மூலோபாய திசைகள்/ வழிகாட்டுதல்	பிரதான செயற்பாட்டு பகுதிகள்	2030 க்குள் குறிகாட்டிகள் மற்றும்/ அல்லது இலக்குகளை கண்காணித்தல்	பொறுப்புக் கூறும் பிரதான நிறுவனங்கள் அல்லது அமைப்புகள்	மூலோபாய திசையில் எதிர்பார்க்கப்படும் பலாபலன்கள் அல்லது விளைவுகள்
		4.7.2.4. ஐந்து (5) பகுதிகளைக் கொண்ட பழங்கள் மற்றும் காய்கறிகளை உட்கொள்ளும் பொரியவர்களின் சதவீதம் 27.5% (STEP,2015) இருந்து 35% ஆகக் அதிகரித்துள்ளது.		
	4.7.3. வேலைத்தளங்களில் உணவக வழிகாட்டுதல்களை நடைமுறைப்படுத்துதல்.	4.7.3.1. ஆரோக்கியமான உணவு கிடைப்பனவு மற்றும் வேலைத்தளங்களில் உள்ள உணவகங்களுக்கான உணவு பாதுகாப்பு ஆகியவற்றின் அடிப்படையில் தரங்களை (Grade A/B/C) மதிப்பிடும் முறை உள்ளது. (ஆதாரம் - e-EOH&FS)	- சுகாதாரம் - உணவுத் தொழிற்சாலைகள் - உணவு நிறுவனங்கள்	
	4.7.4. அனைத்து அமைப்புகளிலும் பெரியவர்களுக்கு தேவையான போசாக்கு பராமரிப்புச் சேவைகளை வழங்குதல்.	4.7.4.1. பிரதேச மட்டத்தில் வயது வந்த மக்களிடையே வழக்கமான போசாக்கு மதிப்பீட்டின் பொறிமுறையின் கிமைப்பனவுத் தன்மை. 4.7.4.2. பிரதேச மட்டத்தில் ஒவ்வொரு மூன்று வருடங்களுக்கும் போசாக்கு நிலையை மதிப்பிடும் வயது வந்தவர்களின் விகிதம். (ஆதாரம் - தொற்றா நோய்ப் பிரிவு)	- சுகதாரம் - சுதேச மருத்துவம்	
	4.7.5. விழிப்புணர்வை உருவாக்கி சூழலை செயல்படுத்துவதன் மூலம் உடல் செயற்பாடுகளில் பாதிக்கப்படக்கூடிய குழுக்கள் உட்பட பொரியவர்களுக்கு அதிகாரமளித்தல்.	4.7.5.1. ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆண்டுதோறும் நிறுவப்பட்ட திறந்த உடற்பயிற்சி கூடங்கள் நடைபாதைகளின் எண்ணிக்கை. (ஆதாரம் - பிரதேச செயலக தரவுத்தாள்கள்)	- நிதி - தேசிய திட்டமிடல் நகர்ப்புற அபிவிருத்தி	

மூலோபாய திசைகள்/ வழிகாட்டுதல்	பிரதான செயற்பாட்டு பகுதிகள்	2030 க்குள் குறிகாட்டிகள் மற்றும்/ அல்லது இலக்குகளை கண்காணித்தல்	பொறுப்புக் கூறும் பிரதான நிறுவனங்கள் அல்லது அமைப்புகள்	மூலோபாய திசையில் எதிர்பார்க்கப்படும் பலாபலன்கள் அல்லது விளைவுகள்
		4.7.5.2. நடைமுறைப்படுத்தப்படும் உடல் செயல்பாட்டு திட்டத்துடன் கூடிய சுகாதார நிறுவனங்களின் எண்ணிக்கை. (ஆதாரம் - HLC ஆய்வு/ NCD பிரிவு) 4.7.5.3. பொது மக்களிடையே உடல் செயல்பாடுகளை மேம்படுத்துவதில் பயிற்சி பெற்ற சுகாதாரப் பணியாளர்களின் எண்ணிக்கை (ஆதாரம் - HLC MaT/ NCD பிரிவு) 4.7.5.4. 18-59 வயது வந்தவர்களிடையே போதிய உடல் செயல்பாடுகளின் சதவீதம் 30.4% (STEP, 2015) இலிருந்து 25.0% ஆகக் குறைக்கப்பட்டது. (ஆதாரம் - தொற்றா நோய்களுக்கான கணக்கெடுப்பு)	- விளையாட்டு - சுகாதாரம் - உள்ளூர் அதிகாரிகள்	
	4.7.6. பெரியவர்களை இலக்காகக் கொண்ட போசாக்கு தலையீடுகளின் கண்காணித்து மதிப்பீடு செய்தல்.	4.7.6.1. STEP கணக்கெடுப்பு அறிக்கைகள் பெரியவர்களிடையே தொற்று அல்லாத நோய்களுக்கான ஆபத்து காரணிகளைக் கண்டறிவதற்கு வசதியாக இருக்கும். (ஆதாரம் - தொற்றா நோய்களுக்கான பிரிவு)	- சுகாதாரம் - சமூக அதிகாரம	

மூலோபாய திசைகள்/ வழிகாட்டுதல்	பிரதான செயற்பாட்டு பகுதிகள்	2030 க்குள் குறிகாட்டிகள் மற்றும்/ அல்லது இலக்குகளை கண்காணித்தல்	பொறுப்புக் கூறும் பிரதான நிறுவனங்கள் அல்லது அமைப்புகள்	மூலோபாய திசையில் எதிர்பார்க்கப்படும் பலாபலன்கள் அல்லது விளைவுகள்
4.8 முதியோர் யாவருக்குமான போசாக்கு சேவைகளுக்கான அணுகலை ஏற்படுத்துவதுடன், தேவையானளவு போசாக்கிற்கு ஏதுவான சூழலை ஏற்படுத்தல்.	4.8.1.அ) போசாக்கு மதிப்பீடு, போசாக்கு ஆதரவு மற்றும் பராமரிப்பு உள்ளிட்ட அனைத்து அமைப்புகளிலும் (நிறுவனம், சமூகம்) பெரியவர்களுக்கு போசாக்கு பராமரிப்பு சேவைகளுக்கான ஒரு விரிவான பொறிமுறையை நிறுவுதல். 4.8.1.ஆ) போசாக்கு சேவைகளை அணுக முதியவர்களுக்கு அதிகாரம் அளித்தல்	4.8.1.1. பிரதேச மட்டத்தில் முதியோர் மக்களிடையே போசாக்கு மதிப்பீட்டினை ஆற்றெல்லைப் படுத்துகிறது. (ஆதாரம் - சுகாதார அமைச்சகத் தரவுத்தாள்கள்) 4.8.1.2. 60-69 வயதுக்குட்பட்ட முதியோர்களிடையே எடை குறைவாக இருப்பது 16.4% (STEP, 2015) இலிருந்து 10.0% ஆக அல்லது அதற்கும் குறைவாக உள்ளது. (ஆதாரம் - தொற்றா நோய்களுக்கான பிரிவு) 4.8.1.3. 60-69 வயதுக்குட்பட்ட முதியோர்களிடையே அதிக எடையின் பாதிப்பு 23.7% (STEP, 2015) இலிருந்து 17.0% ஆக அல்லது அதற்கும் குறைவாக உள்ளது. (ஆதாரம் - தொற்றா நோய்களுக்கான பிரிவு) 4.8.1.4. 60-69 வயதுக்குட்பட்ட முதியோர்களிடையே அதீத உடல் பருமன் பாதிப்பு 6.3% (STEP, 2015) இலிருந்து 5.0% க்கும் குறைவாக உள்ளது. (ஆதாரம் - தொற்றா நோய்களுக்கான பிரிவு)	- சுகாதாரம் - முதியோர் செயலகம்	4.8.1. முதியோர்களுக்கான ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்ட விரிவான போசாக்கு பராமரிப்பு மற்றும் முதியோருக்கான ஆதரவு தொகுப்பு உருவாக்கப்பட்டது. 4.8.2. அனைத்து முதியோர்களாலும் பெறப்பட்ட பொருத்தமான போசாக்கு தலையீடுகள் மற்றும் பராமரிப்பு சேவைகள். 4.8.3. வயதானவருக்கான போசாக்கு ஆதரவு மற்றும் பராமரிப்பு சேவைகளுக்கான திறமையான கண்காணிப்பு பொறிமுறையானது கிடைக்கப்பெற்றது.

மூலோபாய திசைகள்/ வழிகாட்டுதல்	பிரதான செயற்பாட்டு பகுதிகள்	2030 க்குள் குறிகாட்டிகள் மற்றும்/ அல்லது இலக்குகளை கண்காணித்தல்	பொறுப்புக் கூறும் பிரதான நிறுவனங்கள் அல்லது அமைப்புகள்	மூலோபாய திசையில் எதிர்பார்க்கப்படும் பலாபலன்கள் அல்லது விளைவுகள்
	4.8.2. அனைத்து வயதானவர்களுக்கும் பொருத்தமான, விரிவான போசாக்கு தலையீடுகளைச் செயல்படுத்த வளங்களை (மனித, நிதி, உள்கட்டமைப்பு போன்றவை) மேம்படுத்துதல்.	4.8.2.1. முதியோர் போசாக்கு பராமரிப்பை நிரூபிப்பதற்காக அரசாங்க அமைப்பில் சோர்க்கப்பட்ட போசாக்கு நிபுணர்களின் எண்ணிக்கை. (ஆதாரம் - சுகாதார அமைச்சகம்)	- சுகாதாரம் - நிதி - தேசிய திட்டமிடல்	
	4.8.3. முதியோர்களுக்கான குடியிருப்பு பராமரிப்புக்கான தேசிய போசாக்கு தர நியமங்களை உருவாக்கி செயல்படுத்துதல்.	4.8.3.1. பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களில் தேசிய போசாக்கு தர நியமங்களைப் பின்பற்றும் முதியோர் பராமரிப்பு நிறுவனங்களின் விகிதம். (ஆதாரம் - போசாக்குப் பிரவு)	- சுகாதாரம் - முதியோர் செயலகம் - சமூக சேவைகள் - பராமரிப்பு இல்ல வசதிகள்	
	4.8.4. எல்லா அமைப்புகளிலும் பெரியவர்களின் திறனுக்கு ஏற்ப உடல் செயல்பாடுகளை எளிதாக்குதல்	4.8.4.1. வயதானவர்களுக்கு உடல் செயல்பாடுகளுக்கு எளிதாக அணுகக்கூடிய திறந்தவெளிப் பயிற்சிகள் (ஆதாரம் - பிரதேச செயலகம்) 4.8.4.2. ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆண்டுதோறும் நிறுவப்பட்ட திறந்த உடற்பயிற்சிக் கூடங்கள்/ நடைப்பாதைகளின் எண்ணிக்கை. (ஆதாரம் - பிரதேச செயலகம்) 4.8.4.3. 60-69 வயது வந்தவர்களிடையே போதுமான உடல் செயல்பாடுகளின் சதவீதம் 36% (2015) இலிருந்து 15% ஆகக்குறைக்கப்பட்டது. (ஆதாரம் - தொற்றா நோய்க் பிரிவு கணக்கெடுப்பு)	- நிதி - தேசிய திட்டமிடல் - நகர்ப்புற அபிவிருத்தி - விளையாட்டு - உள்ளூர் அதிகாரிகள்	

மூலோபாய திசைகள்/ வழிகாட்டுதல்	பிரதான செயற்பாட்டு பகுதிகள்	2030 க்குள் குறிகாட்டிகள் மற்றும்/ அல்லது இலக்குகளை கண்காணித்தல்	பொறுப்புக் கூறும் பிரதான நிறுவனங்கள் அல்லது அமைப்புகள்	மூலோபாய திசையில் எதிர்பார்க்கப்படும் பலாபலன்கள் அல்லது விளைவுகள்
	4.8.5. அனைத்து அமைப்புக்களிலும் அனைத்து மட்டங்களிலும் (பிரிவு, மாவட்டம், மாகாணம் மற்றும் தேசிய) முதியோர்களுக்கான போசாக்கு ஆதரவு மற்றும் பராமரிப்பு சேவைகளின் வழக்கமான கண்காணிப்பு பொறிமுறையை நிறுவுதல்.	4.8.5.1. முதியோர் போசாக்கு சேவைகளுக்காக ஆண்டுதோறும் பல்வேறு நிலைகளில் நடத்தப்படும் ஆய்வு கூடங்களின் எண்ணிக்கை. (ஆதாரம் - சுகாதார அமைச்சகம்/ மாகாண/ மாவட்டம்/ பிரதேச செயலக தரவுத்தளங்கய்)	- சுகாதாரம்	
4.9. பாதிக்கப்படக் கூடிய மக்களின் போசாக்கு நிலையை மேம்படுத்த பொருத்தமான தலையீடுகளை செயல்படுத்துதல்.	4.9.1. போசாக்கினால் பாதிக்கப்படக்கூடிய நபர்கள்/ குடும்பங்கள்/ மக்கள்தொகை (பின்தங்கிய மக்கள்/ கடுமையான அல்லது நாட்பட்ட நோய்கள் உடையவர்கள். மலையக நகர்ப்புறம் போன்றவை) பிரதேச அளவில் உள்ள வரைபடம்.	4.9.1.1. பிரதேச மட்டத்தில் போசாக்கு பாதிப்பு உள்ள குடும்பங்களில் புதுப்பிக்கப்பட்ட வரைபடத்தின் கிடைப்பனவுத் தன்மை (ஆதாரம் - பிரதேச செயலக தரவுத்தாள்கள்)	- தேசிய திட்டமிடல் - நிதி - சுகாதாரம் - மாகாண/ உள்ளூர் அதிகாரிகள்	4.9.1. பாதிக்கப்படக் கூடிய மக்களிடையே போசாக்கு நிலை மேம்படுத்தப்பட்டது.
	4.9.2. பாதிப்பு நிலைக்கு ஏற்ப இலக்கு நேரடி மற்றும் மறைமுக போசாக்கு தலையீடுகளை திட்டமிட்டு செயல்படுத்துதல்.	4.9.2.1. பாதிக்கப்படக்கூடிய நபர்களிடையே குறைவான எடை அடிப்படையிலிருந்து 30% இனால் மேம்படுத்துதல் (ஆதாரம் - RDHS தரவுத்தாள்) 4.9.2.2. பாதிக்கப்படக்கூடிய நபர்களிடையே அதிக எடை மற்றும் அதீத உடல் பருமன் அடிப்படையிலிருந்து 30% இனால் மேம்படுத்துதல் (ஆதாரம் - RDHS தரவுத்தாள்)	- சுகாதாரம் - நீர் விநியோகம் - உள்ளூர் அதிகாரிகள் - சமூக அதிகாரம் - CSO க்கள்	

மூலோபாய திசைகள்/ வழிகாட்டுதல்	பிரதான செயற்பாட்டு பகுதிகள்	2030 க்குள் குறிகாட்டிகள் மற்றும்/ அல்லது இலக்குகளை கண்காணித்தல்	பொறுப்புக் கூறும் பிரதான நிறுவனங்கள் அல்லது அமைப்புகள்	மூலோபாய திசையில் எதிர்பார்க்கப்படும் பலாபலன்கள் அல்லது விளைவுகள்
4.10. நோய் தொடர்பான (கடுமையான மற்றும் நாள்பட்ட) மந்த போசாக்கை தடுத்தலும் முகாமை செய்தலும்.	4.10.1. நாட்பட்ட நோயினால் பாதிக்கப்பட்ட வெளிப்புற நோயாளிகளுக்கு போசாக்கு சேவைகளை வழங்க சுகாதார அமைப்பை வலுப்படுத்துதல்.	4.10.1.1. ஒவ்வொரு மட்டத்திலும் நிறுவப்பட்டுள்ள போசாக்குச் சிகிச்சை நிலையங்களின் எண்ணிக்கை (ஆதாரம் - RDHS தரவுத்தளங்கள்)	- சுகாதாரம் - தேசிய மருத்துவம்	4.10.1. பாதிக்கப்படக் கூடிய மக்களிடையே கடுமையான மறறும்/ நாள்பட்ட நோய்தொற்றுகள்/ நோய்களைத் தடுக்கவும் கட்டுப்படுத்தவும் வாழ்கைகைத் தரம் மேம்படுத்தப்பட்ட மற்றும் ஆரோக்கியமான கூழல் ஏற்படுத்தப்பட்டது. 4.10.2. கடுமையான மறறும்/ அல்லது நாள்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்ட நோயளிகளிடையே போசாக்கு குறைபாட்டை தடுப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்குமான வழிமுறைகள் செயல்படுத்தப்படுகின்றன.
	4.10.2. உள்நோயாளிகள் மற்றும் மறுவாழ்வுக் காலத்தின் போது உகந்த போசாக்கை உறுதி செய்வதற்கான வழிமுறைகளை ஒழுங்குபடுத்துதல்.	4.10.2.1. கடுமையான மற்றும்/ அல்லது நாள்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்ட நோயாளிகளிடையே போசாக்குக் குறைபாட்டைத் தடுப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் வழிமுறைகளின் இருப்பு.	- சுகாதாரம் - தேசிய மருத்துவம்	
	4.10.3. SBCC மற்றும் சமூக பாதுகாப்பு வலைத் திட்டங்கள் மூலம் வீடு/ சமூக அளவில் கடுமையான/ நாட்பட்ட நோய்கள் மற்றும் நோய்த்தடுப்பு சிகிச்சையின் போது மற்றும் அதற்குப் பின்னரும் உகந்த போசாக்கை வழங்க சமூகத்திற்கு அதிகாரம் அளித்தல்.	4.10.3.1. எச்.ஐ.வி / எய்ட்ஸ் உடன் வாழும் மக்களிடையே மெலிந்தவர்களின் விகிதம் (ஆதாரம் - தேசிய STD/எய்ட்ஸ் கட்டுப்பாட்டுத் திட்டம்) 4.10.3.2. காசநோய் உள்ளவர்களிடையே மெல்லிய தன்மையின் விகிதம் (ஆதாரம் - காசநோய் கட்டுப்பாடு மற்றும் மார்பு நோய்களுக்கான தேசிய திட்டம்) 4.10.3.3. புற்றுநோயால் பாதிக்கப்பட்ட மக்களிடையே மெல்லிய தன்மையின் விகிதம். (ஆதாரம்- தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டுத் திட்டம்)	- சுகாதாரம் - தேசிய மருத்துவம் - சமூக அதிகாரம் - CSOs	

மூலோபாய திசைகள்/ வழிகாட்டுதல்	பிரதான செயற்பாட்டு பகுதிகள்	2030 க்குள் குறிகாட்டிகள் மற்றும்/ அல்லது இலக்குகளை கண்காணித்தல்	பொறுப்புக் கூறும் பிரதான நிறுவனங்கள் அல்லது அமைப்புகள்	மூலோபாய திசையில் எதிர்பார்க்கப்படும் பலாபலன்கள் அல்லது விளைவுகள்
	4.10.4. தொற்றா நோய்கள் மற்றும் நோய்தொற்றுகள் (காசநோய், வயிற்றுப்போக்கு நோய்கள், HIV/AIDS போன்றன) உள்ள மக்களின் போசாக்கு குறைபாட்டைத் தடுக்கவும் கட்டப்படுத்தவும் வருமானம் ஈட்டுதல் ஆரோக்கியமான உணவு மற்றும் போசாக்கு கூடுதல், பாதுகாப்பான நீர் மற்றும் சுகாதாரம் ஆகியவற்றின் முலம் வலுவூட்டுதல்.	4.10.4.1. பாதுகாப்பான குடிநீர் சேவைகளைப் பயன்படுத்தும் மக்கள் தொகையின் விகிதம் 94% (2014) இலிருந்து 100% ஆக மேம்படுத்துதல். (ஆதாரம் - GLAA 4.10.4.2. ஐந்து (5) வயதிற்குட்டபட்ட குழந்தைகளிடையே கடுமையான சுவாசநோய்த் தொற்றுகைகள் அடிப்படை மட்டத்திலிருந்து 50% இனால் குறைக்கப்பட்டுகின்றன. (ஆதாரம் - சுகாதார அமைச்சகம்) 4.10.4.3. ஐந்து (5) வயதிற்குட்டபட்ட குழந்தைகளிடையே வயிற்றுப்போக்கு நோய்கள் அடிப்படை மட்டத்திலிருந்து 50% இனால் குறைக்கப்பட்டுகின்றன. (ஆதாரம் - சுகாதார அமைச்சகம்)	- சுகாதாரம் - தேசிய மருத்துவம் - நீர் விநியோகம் - உள்ளூர் அதிகாரிகள்	

முன்னுரிமைப்படுத்தப்பட்ட கொள்கைப் பரப்பு V - அவசரகால சூழ்நிலைகள் மற்றும் தீவிர வானிலை நிலைமைகளில் போசாக்கு மேம்பாடு				
மூலோபாய திசைகள்/ வழிகாட்டுதல்	**பிரதான செயற்பாட்டு பகுதிகள்**	**2030 க்குள் குறிகாட்டிகள் மற்றும்/ அல்லது இலக்குகளை கண்காணித்தல்**	**பொறுப்புக் கூறும் பிரதான நிறுவனங்கள் அல்லது அமைப்புகள்**	**மூலோபாய திசையில் எதிர்பார்க்கப்படும் பலாபலன்கள் அல்லது விளைவுகள்**
5.1. மீள் எழுச்சி வழிமுறைகளை எளிதாக்குவதன் மூலம் பாதிக்கப்பட்ட மக்களின் போசாக்கு தேவைகளை வழங்க அனர்த்த தயாரிப்பு திட்டங்களை வலுப்படுத்துதல் மற்றும் நெறிப்படுத்துதல்.	5.1.1. போசாக்கு தொடர்பாக அனைத்து மட்டங்களிலும் (தேசிய, மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச) அனர்த்தங்களிற்கு முகங்கொடுக்க ஆயத்தமாதல் மற்றும் தணிப்பு திட்டங்களினை அமுல்படுத்துவதை வலுப்படுத்துதல்.	5.1.1.1. ஒருங்கிணைந்த போசாக்கு நடவடிக்கைகளுடன் மத்திய, மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச மட்டங்களில் இயற்கை அனர்த்தங்களிற்கு முகங்கொடுக்க ஆயத்தமாதல் மற்றும் தணிப்பு திட்டங்கள் எண்ணிக்கை. (ஆதாரம் - DMC தரவுத்தாள்கள்) 5.1.1.2. பாதிக்கப்பட்ட அனைத்து குடும்பங்களிலிருந்தும் அத்தியாவசிய போசாக்குப் பொருட்களுடன்கூடிய உணவுக் கூடையை பெற்றுக்கொண்ட குடும்பங்களின் விகிதம். (ஆதாரம் - பிதரேச செயலக தரவுத்தாள்கள்) 5.1.1.3. அடையாளம் காணப்பட்ட பிரிவு மட்டத்தில் போசாக்குகளைப் பெற்ற (குறை நிரப்பு உணவுகள் உட்பட) பாதிக்கப்படகூடிய நபர்களின் விகிதம். (ஆதாரம் - பிதரேச செயலக தரவுத்தாள்கள்) 5.1.1.4. கிராம மட்டத்தில் அவசரகால போசாக்கு கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்ட பாதிக்கப்பட்ட பாதிக்கப்படக்கூடிய மக்களின் விகிதம். (ஆதாரம் - MOH தரவுத்தாள்கள்)	- அனர்த்த முகாமைத்துவ நிலையம் (DMC) - சுகாதாரம் - தேசிய போசாக்கு செயலகம் - மாகாண/ மாவட்ட/பிரதேச செயலகம் - உள்ளூர் அதிகாரிகள்	5.1.1. அனர்த்த முகாமைத்துவ திட்டங்களினால் பாதிக்கப்படக்கூடிய மக்களின் போசாக்கு தேவைகள் போதுமான அளவில் கவனிக்கப் படுகின்றன. 5.1.2. அனைத்து பங்குதாரர்களும் முன்கூட்டியே தயார் படுத்துவதற்கும் அவசர நிலைகளைத் தணிப்பதற்கும் அதிகாரம் பெற்றள்ளனர் 5.1.3. பாதகமான சீரற்ற காலநிலையை எதிர்க்கும் வகையிலான உணவு தாவரங்கள் கிடைக்கின்றன.

மூலோபாய திசைகள்/ வழிகாட்டுதல்	பிரதான செயற்பாட்டு பகுதிகள்	2030 க்குள் குறிகாட்டிகள் மற்றும்/ அல்லது இலக்குகளை கண்காணித்தல்	பொறுப்புக் கூறும் பிரதான நிறுவனங்கள் அல்லது அமைப்புகள்	மூலோபாய திசையில் எதிர்பார்க்கப்படும் பலாபலன்கள் அல்லது விளைவுகள்
	5.1.2. பல துறைகளின் ஒத்துழைப்புடன் கிராம அளவில் காலநிலை மாற்றும் தீவிர வானிலை நிலைகளுக்கான முன்னறிவிப்பு மற்றும் முன்னெச்சரிக்கை பொறிமுறையை நிறுவுதல்.	5.1.2.1. அனைத்து கிராம மட்டங்களிலும் தீவிர வானிலை நிலைமைகளிலிருந்தும் வழங்கப்பட்ட முன்கூட்டிய எச்சரிக்கைகளின் விகிதம் . (ஆதாரம் - DMC தரவுத்தாள்கள்)	- அனர்த்த முகாமைத்துவ நிலையம் (DMC) - சுற்றுச்சூழல் - மாவட்ட செயலகம் - பிரதேச செயலகம் - உள்ளூர் அதிகாரிகள்/ கிராம அலுவலர் (GN)	
	5.1.3. காலநிலை மாற்றும் தீவிர சீரற்ற வானிலை மற்றும் ஏனைய இயற்கை அனர்த்தங்கள் தொடர்பில் முன்னெச்சரிக்கையும் மற்றும் சமுகங்களை மேம்படுத்துதல்.	5.1.3.1. மாவட்ட அளவில் மதிப்பிட்டதை விட, ஆரம்பகால ஆயத்த நிகழ்ச்சிகள் (பயிற்சிகள்) நடத்தப்பட்ட சமூகங்களின் விகிதம். (ஆதாரம் - பிதரேச செயலக தரவுத்தாள்கள்)	- அனர்த்த முகாமைத்துவ நிலையம் (DMC) - சுகாதாரம் - தேசிய போசாக்கு செயலகம் - மாவட்ட செயலகம் - பிரதேச செயலகம் - உள்ளூர் அதிகாரிகள்/ கிராம அலுவலர் (GN) - சுற்றுச்சூழல் - அபிவிருத்தி பங்காளிகள்/CSO	

மூலோபாய திசைகள்/ வழிகாட்டுதல்	பிரதான செயற்பாட்டு பகுதிகள்	2030 க்குள் குறிகாட்டிகள் மற்றும்/ அல்லது இலக்குகளை கண்காணித்தல்	பொறுப்புக் கூறும் பிரதான நிறுவனங்கள் அல்லது அமைப்புகள்	மூலோபாய திசையில் எதிர்பார்க்கப்படும் பலாபலன்கள் அல்லது விளைவுகள்
	5.1.4. அவரசர நிலைகள் மற்றும் பிந்தைய அவசர நிலைகளின் போது போசாக்கு குறைபாட்டை சரியான முறையில் நிர்வகிப்பதற்கான சுகாதார ஊழியர்களின் திறனை மேம்படுத்துதல்.	5.1.4.1. மாவட்ட அளவில் அவசர மற்றும் பிந்தைய அவசர கால கட்டத்தில் போசாக்கு குறைபாட்டின் சரியான மேலாண்மை குறித்து பயிற்சி பெற்ற தொடர்புடைய சுகாதார பணியாளர்களின் எண்ணிக்கை. (ஆதாரம் - பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தரவுத்தளம் - RDHS)	- சுகாதாரம்	
	5.1.5. முறையான ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க நடைமுறைகள் மூலம் பாதகமான வானிலை எதிர்ப்பு வகைகளை தாவர அடிப்படையிலான உணவுகளை (அரிசி, பருப்பு வகைகள், காய்கறிகள் மற்றும் பழங்கள் போன்றவை) அறிமுகப்படுத்துதல்.	5.1.5.1. தாவர அடிப்படையிலான உணவுகளின் வானிலை – எதிர்ப்பு வகைகளை அடையாளம் காண வருடாந்தம் நடத்தப்படும் ஆராய்ச்சிகளின் எண்ணிக்கை. (ஆதாரம் - DOA) 5.1.5.2. வருடாந்தம் ஆராய்சி செய்து பயிரிடப்படும் புதிய காலநிலை எதிர்ப்பு உணவுகளின் விகிதம். (ஆதாரம் - DOA)	- விவசாயம் - பல்கலைக் கழகங்கள் - ஆராய்ச்சி நிறுவனங்கள்	

மூலோபாய திசைகள்/ வழிகாட்டுதல்	பிரதான செயற்பாட்டு பகுதிகள்	2030 க்குள் குறிகாட்டிகள் மற்றும்/ அல்லது இலக்குகளை கண்காணித்தல்	பொறுப்புக் கூறும் பிரதான நிறுவனங்கள் அல்லது அமைப்புகள்	மூலோபாய திசையில் எதிர்பார்க்கப்படும் பலாபலன்கள் அல்லது விளைவுகள்
5.2. செயல்பாட்டு வழிகாட்டுதல்களின் படி பாதிக்கப்பட்ட மக்களுக்கு போதுமான மற்றும் பாதுகாப்பான போசாக்கை உறுதி செய்வதற்காக நிகழ்ச்சத்திட்ட மேலாளர்கள் மற்றும் அவசர நிவாரண ஊழியர்கள் உள்ளிட்ட தொடர்புடைய பங்குதாரர்களுக்கு அதிகாரம் வழங்குதல்.	5.2.1. அவசர காலங்களில் போசாக்கு ஆதரவுக்கான செயல்பாட்டு வழிகாட்டுதல்களை உருவாக்குதல்/ புதிப்பித்தல் / திருத்துதல்.	5.2.1.1. அவசர நிலைமைகளில் போசாக்கு ஆதரவுக்காக உருவாக்கப்பட்ட/ கிடைக்கும் செயல்பாட்டு வழிகாட்டுதல்களின் எண்ணிக்கை (ஆதாரம் -DMC தரவுத்தளங்கள்). 5.2.1.2. தேவைக்கு மேலதிகமாக புதிப்பிக்கப்பட்டு/திருத்தப்பட்ட செயல்பாட்டு வழிகாட்டுதல்களின் விகிதம் (ஆதாரம் -DMC தரவுத்தளங்கள்).	- சுகாதாரம் - தேசிய போசாக்கு செயலகம் - அனர்த்த முகாமைத்துவ நிலையம்	5.2.1. பாதிக்கப்பட்ட மக்களுக்கு போதுமான மற்றும் தரமான சேவைகளை வழங்க பங்குதாரர்களுக்கு அதிகாரம் உள்ளது.
	5.2.2. உணவை சரியான முறையில் பயன்படுத்துதல் மற்றும் வீணாக்கப்படுவதைத் தடுப்பதை வலியுறுத்தி பலதரப்பட்ட குழுக்கள் மூலம் ஒவ்வொரு மாவட்டத்திலும் அவசர போசாக்குத் திட்டத்தை செயல்படுத்துதல்.	5.2.2.1. அவசர போசாக்குத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்குச் செயல்படும் பல்துறைக் குழுவைக் கொண்ட மாவட்டங்களின் எண்ணிக்கை (ஆதாரம் - செயலகத் தரவுத்தளங்கள்).	- அனர்த்த முகாமைத்துவ நிலையம் (DMC) - சுகாதாரம் - மாவட்ட செயலகம்	
	5.2.3. அவசர காலங்களில் மக்கள் போசாக்கை பராமரிக்க ஒவ்வொரு மாவட்டத்திலும் பேரிடர்களுக்கு செயல்படும் சுகதார மற்றும் சுகாதாரம் அல்லாத துறை ஒருங்கிணைப்புக் குழுவை ஒழுங்குபடுத்துதல்.	5.2.3.1. நிகழ்ச்சி நிரலில் போசாக்கு இணைக்கப்பட்டுள்ள அனர்த்தங்களுக்கான செயல்பாட்டு ஒருங்கிணைப்புக் குழுவைக் கொண்டுள்ள மாவட்டங்களின் எண்ணிக்கை (ஆதாரம் - மாவட்ட செயலகத் தரவுத்தளங்கள்)	- சுகாதாரம் - அனர்த்த முகாமைத்துவ நிலையம் (DMC) - மாவட்ட செயலகம்	

முன்னுரிமைப்படுத்தப்பட்ட கொள்கைப் பரப்பு VI– மூலோபாய தகவல் மேலாண்மையும் ஆராய்ச்சியும்				
மூலோபாய திசைகள்/ வழிகாட்டுதல்	**பிரதான செயற்பாட்டு பகுதிகள்**	**2030 க்குள் குறிகாட்டிகள் மற்றும்/ அல்லது இலக்குகளை கண்காணித்தல்**	**பொறுப்புக் கூறும் பிரதான நிறுவனங்கள் அல்லது அமைப்புகள்**	**மூலோபாய திசையில் எதிர்பார்க்கப்படும் பலாபலன்கள் அல்லது விளைவுகள்**
6.1. ஆதாரங்கள் அடிப்படையிலான தகவல் கொள்கை மற்றும் திட்ட நிரல் முடிவுகள் எடுக்கப்படக்கூடிய சூழலை உருவாக்குவதற்கு மூலோபாய தகவல் முகாமைத்துவ முறைமைகளை வலுப்படுத்தல்.	6.1.1. அனைத்து நேரடி மற்றும் மறைமுக போசாக்கு தலையீடுகளின் சரியான நேர கண்காணிப்பும் மதிப்பீடும்.	6.1.1.1. போசாக்கு மீதான செயல்படும் மூலோபாய தகவல் மேலாண்மை அமைப்பைக் கொண்ட பங்குதாரர்களின் எண்ணிக்கை (ஆதாரம் - தேசிய போசாக்கு செயலகம்)	- தேசிய போசாக்கு செயலகம் - மக்கள் தெகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவியல் துறை - அனைத்து தொடர்புடைய அமைச்சகங்கள் - மாகாண, மாவட்ட, மற்றும் பிரதேச அதிகாரிகள்	6.1.1. போசாக்கு விளைவுகள் மற்றும் கணிப்புகள் பற்றிய சான்றுகள் தொடர்புடைய பங்குதாரர்களுக்கும் மற்றும்/ அல்லது சமூகத்திற்கு தெரிவிக்கப்பட்டது.
	6.1.2. சமூக போசாக்கை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்குமான முடிவுகளை எடுக்க போசாக்கு கண்காணிப்பு முறைமையைப் பயன்படுத்தவும்	6.1.2.1. மைய அளவில் செயல்படும் விரிவான போசாக்கு கண்காணிப்பு முறைமையின் கிடைப்பனவுத் தன்மை (ஆதாரம் - தேசிய போசாக்கு செயலகம்).	- அனைத்து தொடர்புடைய அமைச்சகங்கள் - மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச அதிகாரிகள். - போசாக்கு தொடர்பான நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான மற்றைய அனைத்துத் துறைகளும்/ நிறுவனங்களும்	

மூலோபாய திசைகள்/ வழிகாட்டுதல்	பிரதான செயற்பாட்டு பகுதிகள்	2030 க்குள் குறிகாட்டிகள் மற்றும்/ அல்லது இலக்குகளை கண்காணித்தல்	பொறுப்புக் கூறும் பிரதான நிறுவனங்கள் அல்லது அமைப்புகள்	மூலோபாய திசையில் எதிர்பார்க்கப்படும் பலாபலன்கள் அல்லது விளைவுகள்
	6.1.3. போசாக்கு தொடர்பான தகவல்களின் பொது மக்களுக்கான விழிப்புணர்வை மேம்படுத்துதல்.	6.1.3.1. மாவட்ட மட்டத்தில் பொதுமக்களுடன் போசாக்குத் தரவு பகிர்வு பொறிமுறையின் கிடைப்பனவுத் தன்மை (ஆதாரம் - மாவட்ட செயலக தரவுத்தளங்கள்) 6.1.3.2. பிரதேச மட்டத்தில் குறிப்பிட்ட போசாக்கு பிரச்சனைகள் தொடர்பாக பொதுமக்களின் விழிப்புணர்விற்கான ஊடுறுவும் தளங்களின் கிடைப்பனவுத் தன்மை (ஆதாரம் - பிரதேச செயலக தரவுத்தளங்கள்)	- அனைத்து தொடர்புடைய அமைச்சகங்கள் - மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச அதிகாரிகள். - அபிவிருத்தி பங்காளிகள் - CSO கள்	
6.2. ஒரு உணவு நடத்தை கண்காணிப்பை நிறுவி, அதை போசாக்கு கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டில் இணைத்தல்.	6.2.1. உணவு நடத்தைகளை கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.	6.2.1.1. மூலோபாய தகவல் மேலாண்மை அமைப்புக்களில் உணவு நடத்தை கண்காணிப்பை இணைத்தல் (ஆதாரம் - போசாக்குப் பிரிவு)	- தேசிய போசக்கு செயலகம் - சுகாதாரம்	6.2.1. சமூகத்தில் உள்ள உணவுப் பழக்கவழக்கங்கள் போசாக்கு தலையீடுகளைத் திட்டமிடுதல் மற்றும் செயல்படுத்துவதில் கண்காணிக்கப்பட்டு திறம்பட பயன்படுத்தப் படுகின்றன.
	6.2.2. SBCC இன் இலக்கு தலையீடுகளை செயல்படுத்துவதில் நடத்தை கண்காணிப்பு தகவலைப் பயனபடுத்துதல்.	6.2.2.1. பிரதேச மட்டத்தில் ஆரோக்கியமற்ற போசாக்கு நடைமுறைகளுக்காக செயல்படுத்தப்பட்ட சமூக நடத்தை மாற்ற மட்டங்களின் எண்ணிக்கை. (ஆதாரம் - MOH/CSO தரவுத்தாள்கள்)	- தேசிய போசக்கு செயலகம் - சுகாதாரம் - போசாக்கு தொடர்பான நடவடிக்கைகளுக்கு பொறுப்பான அனைத்து துறைகள்	

மூலோபாய திசைகள்/ வழிகாட்டுதல்	பிரதான செயற்பாட்டு பகுதிகள்	2030 க்குள் குறிகாட்டிகள் மற்றும்/ அல்லது இலக்குகளை கண்காணித்தல்	பொறுப்புக் கூறும் பிரதான நிறுவனங்கள் அல்லது அமைப்புகள்	மூலோபாய திசையில் எதிர்பார்க்கப்படும் பலாபலன்கள் அல்லது விளைவுகள்
	6.2.3. சமூகத்தில் நுகர்வு முறைகள் மற்றும் போசாக்கு விளைவுகளை அடையாளம் காண அவ்வப்போது ஆய்வுகளை நடத்துதல்.	6.2.3.1. திட்டமிடப்படாத சமூகத்தில் ஊட்டச்சத்து விளைவுகளையும் நுகர்வு முறையையும் கண்டறிவதற்காக நடத்தப்பட்ட காலமுறை ஆய்வுகளின் விகிதம். (ஆதாரம் - MOH/ DCSதரவுத்தளம்)	- தேசிய போசக்கு செயலகம் - சுகாதாரம் - DCS	
6.3. சான்றுகளை அடிப்படையாகக் கொண்ட தகவல்களை உருவாக்குவதற்கு பொருத்தமான ஆராய்ச்சியை ஆதரித்தல் மற்றும் இந்த சான்றுகளை பரிந்துரைத்தல், திட்டமிடல், செயல்படுத்தல் மற்றும் போசாக்கு தலையீடுகளை காலகாலம் மதிப்பிடுதல்.	6.3.1. ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்ட நேரடி மற்றும் மறைமுக போசாக்கு தலையீடுகளைத் திட்டமிடுவதற்கும் செயல்படுத்துவதற்கும் ஆராய்ச்சி இடைவெளிகளைக் கண்டறிதல் மற்றும் அவற்றின் அடிப்படையில் ஆராய்ச்சிகளை நடத்துதல்.	6.3.1.1. அடையாளம் காணப்பட்ட போசாக்கு தொடர்பான ஆராய்ச்சி இடைவெளிகளின் அடிப்படையில் நடத்தப்பட்ட ஆராய்ச்சிகளின் எண்ணிக்கை (ஆதாரம் - MOH/ பல்கலைக்கழக தரவுத்தாள்கள்) 6.3.1.2. உணவு நுகர்வு தொடர்பாக நடத்தப்பட்ட சந்தை நடத்தை ஆய்வுகளின் எண்ணிக்கை (ஆதாரம் - MOH/ பல்கலைகழகம் / ஆராய்ச்சி நிறுவன தரவுத்தாள்கள்)	- தொடர்புடைய அனைத்து அமைச்சகங்கள் - அபிவிருத்தி பங்காளிகள் - அரச சாரா நிறுவனங்கள்	6.3.1. போசாக்கு தலையீடுகளுக்கு முன்னுரிமை அளிக்கவும் செயல்படுத்தவும் மிகவும் எதிர்ப்பாற்றல் மிக்க உணவு நடத்தைகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. 6.3.2. அடையாளம் காணப்பட்ட போசாக்கு விளைவுகளை கண்காணிக்க அடிப்படைகள் நிறுவப்பட்டுள்ளன.
	6.3.2. தேசிய போசாக்குக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதைக் கண்காணிப்பதற்குத் தேவையான நேரடி மற்றும் மறைமுக போசாக்கு தலையீடுகளுக்கான அடிப்படைகளை நிறுவுதல்.	6.3.2.1 தேசிய போசாக்கு கொள்கையின் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு செய்வதற்கான அடிப்படை மற்றும் குறிப்பிட்ட காலத் தகவல்களின் கிடைக்கும் தன்மை (ஆதாரம் -- MOH/DCD பல்கலைகழகம் / ஆராய்ச்சி நிறுவன தரவுத்தாள்கள்)	- தொடர்புடைய அனைத்து அமைச்சங்கள் - கல்வி/ ஆராய்ச்சி நிறுவனங்கள் - அபிவிருத்தி பங்காளிகள் - அரசசாரா நிறுவனங்கள்	

மூலோபாய திசைகள்/ வழிகாட்டுதல்	பிரதான செயற்பாட்டு பகுதிகள்	2030 க்குள் குறிகாட்டிகள் மற்றும்/ அல்லது இலக்குகளை கண்காணித்தல்	பொறுப்புக் கூறும் பிரதான நிறுவனங்கள் அல்லது அமைப்புகள்	மூலோபாய திசையில் எதிர்பார்க்கப்படும் பலாபலன்கள் அல்லது விளைவுகள்
	6.3.3. அடிக்கடி உட்கொள்ளும் மற்றும் வழக்கத்திற்கு மாறான உணவுகள் குறித்து போசாக்கு பகுப்பாய்வு மற்றும் கிடைகக்கூடிய உயிர்ப்புத்தன்மை பற்றிய ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல்.	6.3.3.1. புதிப்பிக்கப்பட்ட உணவு சேர்மான அட்டவணைகளின் கிடைப்பனவுத் தன்மை (அட்டவணை ஆதாரம் - மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம்) 6.3.3.2. போசாக்குகளின் உயரியல் கிடைக்கும் தன்மை குறித்து நடத்தப்பட்ட ஆராய்ச்சிகளின் எண்ணிக்கை (ஆதாரம் - சுகாதார அமைச்சகம்/ பல்கலைக்கழகம்/ ஆராய்ச்சி நிறுவன தரவுத்தாள்கள்)	- சுகாதாரம் - மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளியியல் துறை - கல்வி/ ஆராய்ச்சி நிறுவனங்கள்	
	6.3.4. முன்னுரிமை ஆராய்ச்சி மற்றும் குறிப்பிட்ட கால இடைவெளியில் ஆய்வுகளுக்கு தேவையான ஆதாரங்களை வழங்குதல்.	6.3.4.1. தேவைக்கேற்ப நிதி ஆதாரங்களின் இருப்பனவு (ஆதாரம் - தொடர்புடைய துறைகளின் தரவுத்தாள்கள்) 6.3.4.2. அடையாளம் காணப்பட்டவைக்கு மேலதிகமான ஆராய்ச்சிகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகளின் கிடைப்பனவுத் தன்மை (ஆதாரம் - தொடர்புடைய துறைகளின் தரவுத்தாள்கள்)	- தொடர்புடைய அனைத்து அமைச்சகங்கள் - நிதி - விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பம் - தேசிய திட்டமிடல்	

சொற்களஞ்சியம்

1. **உணவு பாதுகாப்பு-** அனைத்து மக்களுக்கும் எல்லா நேரங்களிலும், அவர்களின் உணவுத் தேவையையும், சுறுசுறுப்பான மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கைக்கான உணவு விருப்பங்களையும் பூர்த்தி செய்ய போதுமான பாதுகாப்பான மற்றும் சத்தான உணவுக்கான உடல் மற்றும் பொருளாதார அணுகலைக் கொண்டிருக்கும் போது உணவு பாதுகாப்பு உள்ளது (உலகின் உணவுப் பாதுகாப்பின்மை நிலை 2001, FAO. 2002).

2. **போசாக்கு பாதுகாப்பு** - அனைத்து மக்களுக்கும் எல்லா நேரங்களிலும், சுறுசுறுப்பான ஆரோக்கியமான வாழ்க்கைகான அவர்களின் உணவுத் தேவைகள் மற்றும் உணவு விருப்பங்களை பூர்த்தி செய்வதற்கான பாதுகாப்பு, சுகாதாரமான சூழல், போதுமான சுகாதாரம், கல்வி மற்றும் பராமரிப்பு எனபவற்றுடன் போதுமான அளவு மற்றும் தரமான உணவை பல்வேறு வகை, பன்முகத்தன்மை, போசாக்கு மற்றும் உள்ளடக்கம் ஆகியவற்றின் அடிப்படையில் உட்கொள்ளும் போது போசாக்கு பாதுகாப்பு உள்ளது (உலகின் உணவுப் பாதுகாப்பின்மை நிலை, FAO, WFP, மற்றும் IFAD 2012).

3. **போசாக்கு குறைபாடு** (மந்தபோசணை) போசாக்கு குறைபாடு என்பது ஒரு நபரின் ஆற்றல் மற்றும்/அல்லது ஊட்டச்சத்துக்களை உட்கொள்வதில் உள்ள குறைபாடுகள், அதிகபடியான அல்லது ஏற்றத்தாழ்வுகளைக் குறிக்கிறது. (உலக சுகாதார அமைப்பின் தகவல் தாள், 2020) அதாவது இதில் குறைவான போசாக்கு, அதிக போசாக்கு மற்றும் நுண்ணூட்டச்சத்து குறைபாடுகளை உள்ளடக்கியது ஆகும்.

4. **ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளிடையே ஒல்லியாதல் (அல்லது மெலிதல்)** குழந்தைளின் உயரத்திற்கு ஏற்ற எடை WHO இன் குழந்தை வளர்ச்சி தரநிலைகளின் சராசரிக்கு கீழே இரண்டு நிலையான விலகல்களுக்கு (< - 2SD) மேல் இருந்தால் ஒல்லியாதல் என வரையறுக்கப்படுகிறது. இது எடை இழப்புக்கான சமீபத்திய மற்றும் கடுமையான செயல்முறைகளைக் குறிக்கிறது, மேலும் இது பொரும்பாலும் அடிக்கடி கடுமையான பட்டினியுடன் தெடர்புடையது.

5. **ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளிடையே குள்ளமாதல் / வளர்ச்சி குன்றுதல்** - குழந்தைகளின் வயதுக்கு ஏற்ற உயரம் WHO இன் குழந்தை வளர்ச்சி தரநிலைகளின் சராசரிக்கு கீழே இரண்டு நிலையான விலகல்களுக்கு (< - 2SD) மேல் உயரம் இருந்தால் குள்ளமாதல் / வளர்ச்சி குன்றுதல் என வரையறுக்கப்படுகிறது. இது பலவீனமான வளர்ச்சி மற்றும் வளர்ச்சி தூண்டலைக் குறிக்கிறது. இது பெரும்பாலும் மேசமான போசாக்கு, மீணடும் மீண்டும் தொற்று நோய்களுக்கு உள்ளாதல் மற்றும் உளவியல் சமூக தூண்டுதல்களால் ஏற்படுகிறது.

6. **நேரடி (குறிப்பிட்ட போசாக்கு) தலையீடுகள்** - போசாக்குக் குறைபாட்டின் உடனடி தீர்மானங்களை நிவர்த்தி செய்யும் தலையீடுகள் (உ+ம் :- விற்றமின் A மற்றும் துர்நாகம், பிரத்தியேக தாய்ப்பால், உணவு பன்முகத்தன்மையை ஊக்குவித்தல் மற்றும் உணவு வலுவூட்டல் ஆகியவை இதில் அடங்கும்).

7. **மறைமுக (போசாக்கு உணர்திறன்) தலையீடுகள்** - போசாக்கின் அடிப்படையான தீர்மானங்களை நிவர்த்தி செய்யும் தலையீடுகள் (உ+ம் :- வறுமை, உணவுப் பாதுகாப்பின்மை, போதுமான பராமரிப்பு வளங்களுக்கான அணுகல் பற்றாக்குறை) மற்றும் விவசாயம், சமூகப் பாதுகாப்பு, ஆரம்ப குழந்தை வளர்ச்சி, கல்வி, நீர், சுகாதாரம் போன்ற குறை நிரப்புத் துறைகளினால் மேற்கொள்ளப்படுகின்றன.

8. **உணவு இழப்பு** உணவு மதிப்பு சங்கிலியில் அறுவடைக்கு பிந்தைய காலத்திலிருந்து சில்லறை வியாபர நிலை வரையான உணவு இழப்பு (சில்லறை விற்பனை நிலை உட்பட) ஆகும்.

9. **உணவு விரையம்** - சில்லறை விற்பனையாளர்கள், உணவு சேவை வழங்குநர்கள் (விற்பனை நிலையங்கள், உணவு விடுதி போன்றவற்றிலிருந்து எடுத்தச் செல்லுதல்) மற்றும் நுகர்வோர் மட்டங்களில் உணவின் அளவு அல்லது தரம் குறைவதைக் குறிக்கிறது.

10. **அபாயகரமான பொருட்கள்** - உணவு பாதுகாப்புக்கு அபாயங்களான உயிரியல், மரபணு, இராசனவியல், உடல் மற்றும் ஒவ்வாமை போன்ற பண்புகள் காரணமாக உணவு மூலம் பரவும் நோய்களுக்கு வழிவகுக்கும் பொருட்கள்.

11. **அதீத உடல் பருமன், போசாக்கு குறைபாடு மற்றும் காலநிலை மாற்றம் ஆகியவற்றின் உலகளாவிய நோய்க்குறி** - அதீத உடல் பருமன், போசாக்கு குறைபாடு மற்றும் காலநிலை மாற்றம் ஆகியவற்றின் ஒரே நேரத்தில் ஏற்படும் தொற்றுநோய்களினால் தோன்றுகின்ற உலகலாவிய நோய்த்தொற்றைக் குறிக்கின்றது.

12. **இரு கடமை போசாக்கு** நடவடிக்கைகள் (Double duty nutrition actions) போசாக்கின் தலையீடுகள் (செயல்கள்) போசாக்குக் குறைபாடு மற்றும் அதிக போசாக்கு ஆகிய இரண்டையும் நிவர்த்தி செய்கின்றன.

13. **மும்மை கடமை போசாக்கு நடவடிக்கைகள்** (Triple duty nutrition actions) போசாக்கின் தலையீடுகள் (செயல்கள்) போசாக்குக் குறைபாடு, அதிக போசாக்கு மற்றும் நுண்ணூட்டச்சத்து குறைபாடுகள் ஆகிய மூன்றையும் நிவர்த்தி செய்கின்றன.

14. **உணவு மதிப்பு சங்கிலி** உணவுப் பொருட்களை தயாரிப்பதற்குத் தேவையான ஒருங்கிணைந்த உற்பத்தி மற்றும் மதிப்பு சேர்த்தல் நடவடிக்கைகளில் பங்கேற்கும் அனைத்து பங்குதாரர்களையும் உள்ளடக்கிய விநியோகச் சங்கிலி (போசாக்கு தொடர்பான இரண்டாவது சாவதேச மாநாடு, ரோம் (2014)

15. **உணவு இறையாண்மை** சுற்றுச்சூழலியல் ரீதியாக நல்ல மற்றும் நிலையான முறைகள் மூலம் உற்பத்தி செய்யப்படும் ஆரோக்கியமான மற்றும் கலாச்சார ரீதியாக பொருத்தமான உணவுக்கான மக்களின் உரிமை மற்றும் அவர்களின் சொந்த உணவு மற்றும் விவசாய முறைகளை வரையறுக்கும் உரிமை (உணவு இறையாண்மை குறித்த முதல் உலகளாவிய மன்றமான நைலானியின் பிரகடனம், மாலி, 2007).

16. **குறைந்தபட்ச உணவுப் பன்முகத்தன்மை** போதுமான போசாக்கு மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட உணவுகளைப் (WHO, போசாக்கு தரவுத்தளம்) பெற வரையறுக்கப்பட்ட எட்டு உணவுக் குழுக்களில் குறைந்தத ஐந்து உணவு மற்றும் பானங்களின் நுகர்வு. IYCF நடைமுறைகளை 2021,WHO மதிப்படுவதற்கான குறிகாட்டிகளின்படி முந்தைய நாளில் வரையறுக்கப்பட்ட எட்டு உணவுக் குழுக்களின் குறைந்தது ஐந்து உணவு மற்றும் பானங்களை உட்கொண்ட 6 - 23 மாத குழந்தைகளின் சதவீதமாக இந்த காட்டி மதிப்பிடப்படும். இருப்பினும், மூலோயா கட்டமைப்பில் அடிப்படை மதிப்பு முந்தைய வழிகாட்டியின்படி கொடுக்கப்பட்டுள்ளது.

17. **குறைந்தபட்ச உணவு அதிர்வெண் 6 - 23 மாத வயதுடைய குழந்தைகள் :** திண்ம, அரைத்திண்ம அல்லது மென்மையான உணவுகளை குறைந்தபட்சம் இரண்டு முறை (6 - 8 மாதங்கள் வரையிலான குழந்தைகளுக்கு) மற்றும் மூன்று முறை (9 - 23 மாதங்கள் வரையிலான குழந்தைகளுக்கு) (WHO, போசாக்கு தரவுத்தளம்) பெறுவார்கள். இந்த குறிகாட்டியானது 6 - 23 மாத குழந்தைகளின் திண்ம, அரைத்திண்ம அல்லது மென்மையான உணவுகளை (ஆனால் தாய்ப்பால் கொடுக்காத குழந்தைகளுக்கு பாலூட்டுதல் உட்பட) பிந்தைய நாளின் குறைந்தபட்ச எண்ணிக்கையாக மதிப்பிடப்படும். IYCF நடைமுறைகளை மதிப்படுவதற்கான குறிகாட்டிகள் 2021, WHO) இருப்பினும், மூலோயா கட்டமைப்பில் அடிப்படை மதிப்பு முந்தைய வழிகாட்டியின்படி கொடுக்கப்பட்டுள்ளது.

18. **குறைந்தபட்ச ஏற்றுக்கொள்ளக்கூடிய உணவு -** இது உணவுப் பன்முகத்தன்மை மற்றும் தாய்ப்பால் நிலை மூலம் உணவளிக்கும் அதிர்வெண் ஆகியவற்றின் தரங்களை ஒருங்கிணைக்கும் ஒரு குறிகாட்டியாகும். (IYCF நடைமுறைகள் 2007 க்கான WHO குறிகாட்டிகளிலிருந்து பெறப்பட்டது) ஏற்றுக்கொள்ளக்கூடிய குறைந்தபட்ச உணவு பின்வருமாறு வரையறுக்கப்படுகிறது. **தாய்ப்பால் கொடுக்கும் குழந்தைகளுக்கு :** முந்தைய நாளின் போது குறைந்தபட்சம் உணவு பன்முகத்தன்மை மற்றும் அவர்களின் வயதுக்கான குறைந்தபட்ச உணவு அதிர்வெண் ஆகியவற்றைப் பெறுதல் தாய்பபால் கொடுக்காத குழந்தைகளுக்கு முந்தைய நாளின் போது குறைந்தபட்ச உணவுப் பன்முகத்தன்மை மற்றும் குறைந்தபட்ச உணவு முறை அவர்களின் வயதுக்கு குறைந்தபட்சம் இரண்டு முறை பாலூட்டுங்கள்.

    IYCF நடைமுறைகள் 2021, WHO [மதிப்பிடுவதற்கான குறிகாட்களின்படி முந்தைய நாளில் குறைந்தபட்சம் ஏற்றுக்கொள்ளக்கூடிய உணவை உட்கொண்ட 6 - 23 மாத குழந்தைகளின் சதவீதமாக இந்த காட்டி மதிப்பிடப்படும். இருப்பினும் மூலோபாய கட்டடைப்பில் அடிப்படை மதிப்பு முந்தைய வழிகாட்யின்படி கொடுக்கப்பட்டுள்ளது.

19. **ஐந்து (5) வயதுக்குட்பட்ட குழந்தைகளிடையே அதிக எடை -** WHO இன் குழந்தை வளர்ச்சி தரநிலைகளின் சராசரிக்கு மேல் இரண்டு நிலையான விலகல்களை (+2SD) விட உயரத்துக்கு அதிகமான எடை.

20. **ஐந்து (5) வயதுக்குட்பட்ட குழந்தைகளிடையே அதீத உடல் பருமன் -** WHO இன் குழந்தை வளர்ச்சி தரநிலைகளின் சராசரிக்கு மேல் மூன்று நிலையான விலகல்களை (+3SD) விட உயரத்துக்கு அதிகமான எடை.

21. **5-9 வயது குழந்தைகளின் ஒல்லியான தன்மை -** 5 -19 வயதுக்கான WHO இன் குறிப்பு தரநிலைகளுக்கு கிழே இரண்டு நிலையான (-2SD) விலகல்களுக்கு மேல் உயரத்துக்கான எடை.

22. **5-19 வயது குழந்தைகளிடையே வளர்ச்சி குன்றிய தன்மை** 5 - 19 வயதுக்கான WHO இன் குறிப்பு தரநிலைகளுக்கு கிழே இரண்டு நிலையான (-2SD) விலகல்களுக்குக் கிழேயான வயதக்கான உயரம்.

23. **5-19 வயது குழந்தைகளிடையே அதிக எடை** - 5 -19 வயதுக்கான WHO இன் குறிப்பு தரநிலைகள் சராசரியாக ஒரு நிலையான (+1SD) விலகலுக்கு மேல் BMI அதிகமாக உள்ளது.

24. **5-19 வயது குழந்தைகளிடையே அதீத உடல் பருமன் -** 5 - 19 வயதுக்கான WHO இன் குறிப்பு தரநிலைகளுக்கு மேல் இரண்டு நிலையான (+1SD) விலகளை விட அதிகமான BMI உள்ளது.

25. **பெரியவர்களிடையே அதிக எடை** BMI 25ஐ விட அதிகமாகவே அல்லது சமமாகவோ காணப்படும் (பெரியவர்களுக்கான BMI என்பது கிலோகிராமில் எடையை சதுர மீட்டரில் உயரத்தால் வகுக்கப்படுகிறது. BMI = எடை (kg) / உயரம்^{2} (மீ^{2}).

26. **பெரியவர்களிடையே அதீத உடல் பருமன்** அதீத உடல் பருமன் என்பது 30ஐ விட அதிகமாக அல்லது அதற்கு சமனான BMI ஆகும்.

பின்னிணைப்பு

2020 ஆம் ஆண்டிற்கான மெட்ரிக் டன்களில் (MT) பொதுவாகப் பயன்படுத்தப்படும் உணவுகளின் வருடாந்த தேவைகளின் அடிப்படை மதிப்பீடு. (இது ஆண்டுதோறும் மக்கள்தொகை மாற்றத்திற்கு ஏற்ப மாற்றப்படவேண்டும்).

1). அரிசி - 1,663,200 மெட்ரிக் டன்
2). பருப்பு வகைகள் - 415,800 மெட்ரிக் டன்
3). மீன் - 418,857 மெட்ரிக் டன்
4). கோழி இறைச்சி - 147,420 மெட்ரிக் டன்
5). சோயா- 29,484 மெட்ரிக் டன்
6). மாட்டிறைச்சி - 29.484 மெட்ரிக் டன்
7). ஆட்டிறைச்சீ - 20,484 மெட்ரிக் டன்
8) பன்றி இறைச்சி - 29,484 மெட்ரிக் டன்
9). வேர் காய்கறிகள் - 491,400 மெட்ரிக் டன்
10). பச்சை சாய்கறிகள் - 491,400 மெட்ரிக் டன்
11). பச்சை இலைகள் - 737,100 மெட்ரிக் டன்
12). பிற காய்கறிகள் - 638,820 மெட்ரிக் டன்
13). பழங்கள் - 1,965,600 மெட்ரிக் டன்
14). வித்துக்கள் (வேர்க்கடலை போன்றவை) - 189,100
15). முட்டை (எண்) - 7,560,000
16). பால் (கிலோ லீட்டர்) - 756,000
17). தேங்காய் (வித்துக்களின் எண்ணிக்கை) - 3,931,200
18). தேங்காய் எண்ணெய் (கிலோ லிட்டர்) - 49,140
19). பிற எண்ணெய் (MUFA) (கிலோ லிட்டர்) - 98,280
20). சக்கரை மற்றும் வெல்லம் 294,840 மெட்ரிக் டன்

(ஆதாரம் - மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் (MRI))